மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 4 | 1 - 2 - 56 | இதழ் 19

★

புகழ் பெற்ற

மேனாட்டு இசைவல்லுநர்

மொசார்த்

★

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

சிறந்த நடிகர்

அறிஞர் அண்ணா அவர்கள் சிறந்த பேச்சாளர் — எழுத்தாளர் — உரையாடற்காரர் என்று மட்டும் பேர்பெற்றவரல்லர்; அவர் சிறந்த நடிகர் என்றும் பேர்பெற்றவராவார்.

அறிஞர் அண்ணா அவர்களின் நடிப்பைக் காணும் வாய்ப்பைப் பெற்ற நடிகர்களான என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராச பாகவதர், எம். எம். தண்டபாணி தேசிகர், டி. கே. சண்முகம், எம். ஆர். ராதா, கே. சாரங்கபாணி, கே. ஆர். இராமசாமி, எம். ஜி. இராமசந்திரன், எஸ். எஸ். இராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி போன்றவர்களும், பெரியார் ஈ. வெ. இராமசாமி, ஜி. டி. நாயுடு, மறைந்த சௌந்தர பாண்டியன், வி. வி. இராமசாமி, மணவாள ராமானுசம், டி. செங்கல்வராயன் போன்றவர்களும் பிறரும் பலபடப் பாராட்டிப் போற்றியுள்ளார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் இளம்வயதிலிருந்தே நாடகத்திலும், நடிப்பிலும் மிக்க அக்கரை கொண்டு, அவற்றிலே பெருவிருப்புச் செலுத்திவந்தவராவார். அவர் சிறு வயதில் உடன் பழகும் பள்ளிச் சிறுவர்களுடன் சேர்ந்து கொண்டு, மாட்டுக் கொட்டிலில் நாடகம் நடத்துவதுண்டு. எந்தத் தெருக்கூத்து ஆனாலும், எந்த நாடகம் ஆனாலும் அவற்றைப் பார்க்க அவர் தவறுவதேயில்லை.

கை கால்களை ஆட்டி, ஓடியாடிக் குதித்து நடிக்கும் பழக்கத்தை அண்ணா அவர்களிடம் காண முடியாது. அண்ணாவின் கண்களும், முகமும் மட்டுந்தான் நடிக்கும்; சில வேளைகளில் கை அசையும். இனிமையான குரலில், தெளிவான சொற்கள், அழகு படவந்து விழுந்துகொண்டே யிருக்கும். குரலில் தேவையான அளவுக்கு ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். பேச்சு நடைகளில் பார்ப்பனீய நடை—பாகவதர் நடை—பண்டிதர் நடை—பாமரர் நடை—வேதாந்தி நடை—குருமார் நடை—அரசன் நடை—வீரன் நடை எல்லாம் அண்ணா அவர்களுக்குத் தண்ணீர்பட்ட பாடு.

நடிகனுடைய தரத்தை உயர்த்தப் படித்தவர்களும் பொது நாடக மேடையில் தோன்றலாம் என்பதையும், அரசியல் தலைவர்களாய் இருந்தாலும் நாடகம் நடிப்பது இழுக்காகாது என்பதையும், நல்ல கருத்துள்ள சீர்திருத்த நாடகங்கள் தேவை என்பதையும் தமிழகத்தில் நிலைநாட்டிய பெருமை அறிஞர் அண்ணா அவர்களுக்கே முக்கியமாக உரியதாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் ‘சந்திரோதயம்’ ‘சந்திரமோகன்’, ‘நீதிதேவன் மயக்கம்’, ‘போர்வாள்’ ஆகிய நாடகங்களில் இதுவரையில் நடித்துள்ளார்கள்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

1 - 2 - 56 புதன்கிழமை

திக்கெட்டும் முரசம் முழங்கட்டும்!

உறங்கிக் கிடக்கும் தமிழன் விழித்து எழட்டும்! தன் உடைமை பறிபோனதை—பறிபோக இருப்பதை உணரட்டும்! அவன் நெஞ்சு துடிக்கட்டும்! அவன் வீரம் பொங்கட்டும்! அவன் கை கடமைவாள் ஏந்தட்டும்! அவன் அறப்போர்க் களம் நோக்கிப் புறப்படட்டும்! வடநாட்டு மாற்றார் தமிழனுக்கு—தமிழகத்துக்கு — திராவிடனுக்கு — திராவிடத்துக்கு இழைத்துள்ள அநீதிகளைத் துடைக்கட்டும்! மாற்றாரின் அடிமைத்தளையிலிருந்தும் தமிழகத்தை—திராவிடத்தை மீட்கட்டும்! வளமும், நலமும், வலிவும், பொலிவும் பொங்க தமிழகத்தை — திராவிடத்தை உருவாக்கட்டும்! அதற்கான அறப்போர் முரசம் திக்கெட்டும் முழங்கட்டும்! என்று கூவி முழக்கமிட வேண்டிய கட்டத்தில் நாமெல்லாம் நிற்கிறோம்!

வடநாட்டு ஏகாதிபத்திய மத்திய அரசாங்கம் தென்னாட்டுக்குக் குறிப்பாகத் தமிழகத்துக்கு இழைத்து வரும் கொடுமைகளும், அநீதிகளும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. 'வடநாட்டு மத்தியப் பேரரசு குட்டிக் கொண்டே யிருக்கும்; தமிழர்கள்—திராவிடர்கள் குனிந்து கொண்டே இருக்க வேண்டும்' என்ற நிலையை எதிர்பார்த்து அது வாழுகிறது.

தமிழகத்தின் தெற்கே தேவிகுளம்—பீர்மேடு—நெய்யாற்றங்கரை—கொச்சி—சித்தூர்-பாலக்காடு ஆகிய தாலுக்காக்களிலும், வடக்கே சித்தூர் மாவட்டத்திலும் தொடர்ந்தாற்போல உள்ள தமிழ்ப்பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்க்காமல், நேர்மைக்கும் நீதிக்கும் முரணாகவும், அங்கெல்லாம் வாழும் மக்களின் விருப்பத்திற்கு மாறாகவும் அப்பகுதிகளைக் கேரளத்தோடும், ஆந்திரத்தோடும் சேர்க்கத் திட்டமிட்டுத் தீர்ப்புக்கூறி யிருக்கும், பண்டித நேரு சர்க்காரின் போக்கைக் கண்டிக்க வேண்டியதும், கண்டனக் குரல் எழுப்பிப் பண்டித நேருவுக்குக் காட்ட வேண்டியதும், அந்தப் போக்கை மாற்றி யமைக்க வேண்டியதும் தமிழ்ப்பெருங் குடிமக்களின் நீங்காக் கடமையாகும். அந்தக் கடமை யுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, சிற்சில வகைகளிலே கருத்து வேறுபாடுடைய, முற்போக்கு எண்ணங்கொண்ட பல்வேறு அரசியல் கட்சிகளும் ஒன்று கூடி, தேவிகுளம்—பீர்மேடு போன்ற தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்து இழைக்கப்பட்ட அநீதிகளைத் துடைக்க முன்வந்திருப்பது போற்றி வரவேற்கத்தக்க தாகும். நல்லதொரு பணியின் நிமித்தம் அமைந்திருக்கும் கூட்டு முன்னணியைத் தமிழ்ப் பெருங் குடிமக்கள் அனைவரும் போற்றி, வரவேற்று நல்லாதரவு தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம், பொன்னும், பொருளும், போர் வீரர்களும் தந்து தமிழ்ப்பெரு மக்கள் தங்கள் கடமையை ஆற்றுவார்களாக!

திராவிட முன்னேற்றக் கழகம் இனவுணர்ச்சி வழிநின்று, தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய பகுதிகளைக் குறைந்த அளவுத் திட்டங்களில், ஒரு சுதந்திரச் சமதர்ம தனிக் குடியரசுக் கூட்டாட்சியின் கண்ணே கொண்டு வரவேண்டும் என்று பாடுபட்டு வருகிற கழகம் ஆனாலும், தமிழர்கள் என்றமுறையில் தமிழகத்துக்கும், தமிழர்க்கும் சேரவேண்டிய உரிமைகளை விட்டுக் கொடுப்பது அல்ல. தமிழர்களின் உரிமைகளை மலையாளிகளுக்கோ அல்லது ஆந்திரர்க்கோ பணயம் வைக்கக் கழகம் ஒருபோதும் ஒருப்படாது. மொழி வகையில் "தமிழ்நாடு தமிழர்க்குத்"தான்; இன வகையில் "திராவிடநாடு திராவிடர்க்கு"த்தான். எனவே தான் தமிழ்த் திராவிட முன்னேற்றக் கழகத்தார் தமிழர்க்காக—தமிழர் உரிமைக்காகப் பாடுபட வேண்டிய இன்றியமையாக் கடப்பாடுடையவர்களாக இருக்கிறார்கள்.

மொழிவழி மாநிலம் அமைய வேண்டும்; தமிழ் வழங்கும் மாநிலம் தமிழகமாக மாற வேண்டும் என்ற கருத்தில் தான் இப்பொழுது கூட்டு முன்னணியினர் அறப் போராட்டம் துவக்கியுள்ளனர். ஆனால் ஆட்சி மணையில் அமர்ந்திருக்கும் காங்கிரசு ஆளவந்தார்கள் மொழிவழி மாநில அமைப்பைச் சிதைத்துச் சீரழிக்க விரும்புவதோடு, மொழிவழி மாநில அமைப்புக் கோரிக்கையைத் தம் ஆதிக்க வலி

வால் அடக்கி விடலாம் என்று கனவு கண்டு கொண்டு யிருக்கிறார்கள், பொங்கி யெழும் மக்கள் உணர்ச்சியை எதிர்த்து அடக்கி நிறுத்துதல் என்பது எத்தகைய ஆதிக்கத்தாலும் இயலாததொரு செயலாகும் என்பதை, உலக வரலாறு, அவ்வப்போது பாடங் கற்பித்துக் கொண்டுதான் வருகிறது.

மாநிலங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற உணர்வு சென்ற முப்பது ஆண்டுக் காலமாக நாட்டில் நிலவி வருகிறது என்றால் என்ன காரணம்? மாநிலங்கள் புதுப்பிக்கப் பட வேண்டும் என்ற உணர்வு ஏன் பிறந்தது? வெள்ளைக்கார ஏகாதிபத்தியம், பிரித்தாளும் சூழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, மாநிலங்களைக் கண்ட கண்டபடி, தன் நிருவாக வசதிக்கேற்பப் பிரித்துக்கொண்டு வாழ்ந்ததால், அந்தக் கேடான நிலை மாற, மாநிலங்கள் மொழிவழி அடிப்படையில் பிரிக்கப்படவேண்டும் என்று காங்கிரசுப் பேரவை பெருங்குரல் எழுப்பிற்று; எழுப்பி வந்தது. இந்தியத் துணைக் கண்டம் விடுதலைபெற்ற பிறகு நீண்ட காலமாக ஆவலோடு எதிர்பார்த்திருந்த மொழிவழி மாநில அமைப்பு நடைமுறைக்கு வரும் என்றும், தத்தம் மொழியிலே ஆட்சி நடத்தவும் தத்தம் மொழியை வளர்க்கவும் வாய்ப்பு ஏற்படும் என்றுஎல்லோரும் நினைத்தார்கள்; விருப்பத்தை வெளியிட்டனர்; ஆங்காங்குகிளர்ச்சிகளும்நடத்தினர். ஆனால்எந்தக் காங்கிரசுக்காரர்கள் ஆட்சிமணை ஏறுவதற்கு முன்னால் மொழிவழி மாநில அமைப்பை மிக வாக வற்புறுத்தினார்களோ, அதே காங்கிரசுக் காரர்கள் ஆளவந்தார்கள் ஆனதற்குப் பிறகு மொழிவழி மாநில அமைப்பை முறியடிப்பதற்கான திட்டங்களைத் தீட்டி வருவது வியப்பிலும் வியப்பாக இருப்பதோடு, வேதனையூட்டுவதாகவும் இருக்கிறது.

மாநிலப் புது அமைப்புக்குத் தூண்டுகோலாக விளங்கி வந்தது, 'மொழிவழி! என்ற உணர்ச்சியே யல்லாமல், 'பொருளாதார வழி' என்ற உணர்ச்சியோ, 'நிருவாக வசதிவழி' என்ற உணர்ச்சியோ அல்ல என்பதை இப்பொழுது ஒவ்வொருவரும் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். ஒரு மொழி பேசும் மக்கள் ஒரே நிருவாக அமைப்பின் கீழ் அமைவது தான் எல்லா வகையிலும் ஏற்றதாகும் என்ற கருத்தின் அடிப்படையில் தான் 'மொழிவழி மாநிலம்! என்ற கோரிக்கை உரிமை வேட்கைக் கொண்டோரின் உள்ளத்தில் தோன்றியது. அத்தகைய 'மொழிவழி மாநிலம்' என்ற எண்ணத்தையும், எழுச்சியையும் அடியோடு புறக்கணித்துவிட்டு, பொருளாதார வசதி, நிருவாக வசதி என்ற வேண்டாக் காரணங்களைத் தமிழர்க்குத் தீங்கு இழைக்கும் முறையில் காட்டித் தமிழ்ப் பகுதிகளைக் கேரளத்தோடும், ஆந்திரத்தோடும் சேர்க்க ஒரு சர்க்கார் முனைந்திருப்பது நேர்மையற்ற போக்கு—நீதியற்ற செயல்—சனநாயகத்துக்கு மாறுபட்ட தன்மை. இந்த அநீதியைத் துடைக்கத்தான் கூட்டு முன்னணியினர் அறப் போராட்டத்தில் படிப்படியாக இறங்கத் துவங்கியுள்ளனர்.

எரிகிற நெருப்பில் எண்ணெய்யை ஊற்றுவதுபோல், மொழிவழி மாநிலக் கோரிக்கை கொழுந்துவிட்டு எரிந்துகொண் டிருக்கும் போது, அதனைத் தணிக்கத் 'தட்சிணப் பிரதேச அமைப்பு' என்ற கருத்தை ஆளவந்தார்களும், அவரின் பிற ஆதரவாளர்களும் அள்ளி வீசிப் பார்க்கிறார்கள். பல மொழி பேசும் பகுதிகள் ஒரு மாநில அமைப்பின்கீழ் இருப்பதால் பல இடையூறுகள் ஏற்படுகின்றன; பிற ஆட்சிமொழி ஆதிக்கம்செலுத்த நேரிடுகிறது; உள்நாட்டு மொழிகள் வளர வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றன என்று கருதிதான் மொழிவழி மாநில அமைப்பு வெள்ளைக்கார ஆட்சிக் காலத்திலிருந்து வற்புறுத்தப்பட்டு வந்தது. மொழிவழி மாநிலங்கள் அமையும்போது, எல்லைகளில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றலற்ற ஆளவந்தார்கள், 'தட்சிணப் பிரதேச அமைப்பு' என்ற திட்டத்தை நீட்டி ஆறுதல் பெற விரும்புகிறார்கள். தட்சிணப் பிரதேச அமைப்பு, எங்ஙனம் நீண்ட நாட்களாக மக்களின் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கும் வேட்கையைத் தணிக்கும்? வெள்ளைக்காரன் அமைத்து வைத்திருந்த தமிழர்கள்—ஆந்திரர்கள்—கன்னடியர்கள் — மலையாளிகள் ஆகியோரடங்கிய சென்னை மாநிலம் என்ற அமைப்பே மக்களுக்கு மனநிறைவு ஏற்படுத்தாதபோது, அதைவிடப் பெரிதான—சிக்கல்கள் பல நிறைந்த தட்சிணப்பிரதேச அமைப்பு எப்படி நிறைவு ஏற்படுத்தும்? அலுவல் பகிர்வு—அமைச்சர் அவை அமைப்பு—ஆட்சி மொழி—பள்ளிப் பாடமொழி போன்ற பலவற்றில் தமிழர்கள், கன்னடியர்கள், மலையாளிகள் ஆகியவர்களிடையே ஓயாச் சண்டையும், ஒழியாச் சண்டையும் ஏற்படுமே! அந்தச் சண்டைகளைத் தவிர்க்கவேறு என்ன அமைப்பைக் கண்டு பிடிப்பார்கள் இன்றைய ஆளவந்தார்கள்! மீண்டும் மொழிவழி மாநிலப் போராட்டங்கள் எங்ஙனும் உருவாகுமே! மீண்டும் எல்லைத் தகராறுகள் வரத்தானே

செய்யும்! குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொண்டு வருவதுபோல், சென்னை மாநிலம் வேண்டாம் என்று சொல்லி மொழிவழி மாநில அமைப்பு கேட்கப் போய். இப்பொழுது 'தட்சிணப் பிரதேச அமைப்பு' என்ற சேற்றைப் பூசிக்கொண்டு வந்து நிற்கிறார்கள். சேற்றைப் பூசிக்கொள்வதற்குப் பதிலாகக் குளிக்கப் போகாமலே இருந்திருக்கலாமே! சென்னை மாநிலம் என்ற அழுக்கு தோய்ந்த உடம்பிலே 'தட்சிணப் பிரதேசம்' என்ற சேற்றை வேறு பூசிக்கொண்டா வரவேண்டும்? 'சென்னை மாநிலம்' என்ற அழுக்கு சேர்ந்த உடம்பு தூய்மைப்படுத்தப்பட்டுத் 'தமிழகம்' என்ற புதுத் தூய்மையான தோற்றத்தோடு காட்சியளிக்க வேண்டும் என்று தான் நாம் விரும்புகிறோம்,

"பிச்சை எடுத்தாராம் பெருமாள், அதனையும் பிடுங்கினாராம் அனுமார்" என்ற கற்பனைக் கதைப் பழமொழிக் கிணங்கப், புதுமாநில அமைப்புக் குழுவினரிடம் தமிழர்கள் பெற்ற செங்கோட்டையில், பாதி தாலுகாவை நேருப் பண்டிதர் பிடுங்கிவிட்டார். இது தமிழர்களை மேலும் அவமானப்படுத்தும் செயலாகும். இவ்வளவு அவமானங்களையும் தாங்கிக் கொண்டு எப்படித்தான் சென்னை முதலமைச்சர் காமராசரும், பிற தமிழ் அமைச்சர்களும் ஆட்சி மணையில் அமர்ந்திருக்கிறார்களோ தெரியவில்லை! தமிழ்ப் பகுதிகள் அநீதியான முறையில் பிடுங்கப்பட்டு, பிறமாநிலங்களின் வசம் ஒப்படைக்கப்படுகின்றன என்பதை அறிந்தும் அமைச்சர்கள் பதவி நாற்காலிகளில் மானத்தைவிட்டு அட்டைபோல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

"பீர்மேடு—தேவிகுளம் போன்ற தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டும்; இல்லை யாம் எம் பதவிகளைவிட்டு வெளியேறுவோம்" என்று சென்னை அமைச்சர்கள் பண்டித நேருவிடம் ஒப்புக்குச் சொல்லியிருந்திருந்தால் கூட இவ்வளவு அநீதி ஏற்பட்டிருக்காதே! சென்னை அமைச்சர்கள் ஏனோ 'இஞ்சி தின்ற சிறிய திருவடிகள்' போல் காட்சியளிக்கிறார்களோ! தமிழகத்துக்கு அவமானம்! அவமானம்!!

(1) மொழிவழி மாநிலம் அமையவேண்டும். (2) தேவிகுளம்—பீர்மேடு போன்ற எல்லாத் தமிழ்ப் பகுதிகளும் தமிழகத்தோடு இணைய வேண்டும் (3) சென்னை மாநிலம் என்ற பெயரை மாற்றித் 'தமிழ்நாடு' என்று பெயரிடப்பட வேண்டும். (4) தமிழகத்தின் ஆட்சி மொழி தமிழாகவே இருக்கவேண்டும் (5) அகில உலகப் பொதுமொழியான ஆங்கிலமே அனைத்திந்தியாவின் பொதுமொழியாகவும், திராவிடத்தின் பொது மொழியாகவும் இருக்க வேண்டும். (6) தட்சிணப் பிரதேச அமைப்போ அது போன்ற வேறு எந்த அமைப்போ தமிழர்க்கு—திராவிடர்க்கு மனநிறைவு தராது. எனவே அந்த முயற்சிகள் வேண்டாம்

என்ற திட்டங்களை நிறைவேற்ற உரிய நேரிய வழிகளிலெல்லாம் பாடுபட தமிழர்கள்-திராவிடர்கள் திரண்டெழுவார்களாக!

தமிழரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென்று 27—1—56' இல் சென்னையில் கூடிய பல கட்சித் தலைவர்களின் மாநாடு, அறப் போராட்டத்திற்கென செயல் நடப்புக் குழு ஒன்றை தோழர் பி. டி. இராசன் அவர்கள் தலைமையின்கீழ் அமைத்திருப்பது போற்றி வரவேற்கத்தக்கதாகும்,

தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கோச்சி சித்தூர், பாலக்காடு, வடக்கே சித்தூர் மாவட்டம் ஆகியவற்றிலுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழ்நாட்டோடு இணைக்கத் தேவையான முயற்சிகளை முறையாக எடுக்கத் தவறிய சென்னை அரசாங்கத்தின் போக்கைக் கண்டிக்கவும், அந்தப் பகுதிகளைப் பொறுத்து மத்திய நேரு சர்க்கார் இழைத்துள்ள அநீதியை எதிர்க்கவும், தமிழ் நாட்டு மக்கள் அந்தப் பகுதிகளைத் தமிழ்நாட்டோடு சேர்க்க முழுக்க முழுக்க எழுச்சிகொண்டுள்ளார்கள் என்பதைக் காட்டவும், தட்சிணப் பிரதேச யோசனையைத் தமிழர்கள் நிராகரிக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தவும் பிப்ரவரி 20-ஆம் நாளை பொதுவேலை நிறுத்த நாளாகத் தமிழ்நாடு எங்ஙணும் தமிழர்கள் கொள்ள வேண்டும் என்று பல கட்சித் தலைவர்கள் மாநாடு முடிவு செய்திருக்கிறது. அதற்கு ஏற்ப தமிழ் நாட்டிலுள்ள தமிழர்கள் அனைவரும் பொது வேலை நிறுத்தம் செய்து தமிழர்களின் ஒருமனதான எண்ணத்தை வெளியிட வேண்டும் என்று தமிழர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

அறப்போர் படை அமைந்துவிட்டது! அறப்போர் முரசும் முழங்கட்டும்! அறப்போர்ப் படை கிளம்பட்டும்! தமிழர்க்கு வெற்றி கிட்டட்டும். பிப்ரவரி 20 இல் பொது வேலை நிறுத்தத்திற்கான முரசம் திக்கெட்டும் முழங்கட்டும்!

இலங்கைத் தமிழ்ப் பகுதி

தென்னாடு எப்படி வடநாட்டின் ஆதிக்கத்தின் கீழிருந்து பல்வேறு துறைகளில் அவதிப்படுகிறதோ, அதேபோன்று இலங்கையிலுள்ள வடத் தமிழ்ப் பகுதி தெற்குச் சிங்களப் பகுதியின் ஆதிக்கத்தின்கீழ் கிடந்து அல்லல்படவேண்டியிருக்கிறது.

வடவர் ஆட்சியை எதிர்த்துத் திராவிடர்கள் எப்படி வீறுகொண்டு எழவேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, அதேபோன்று

சிங்களவரின் கொடிய ஆதிக்க ஆட்சியை எதிர்த்து இலங்கைத் தமிழர்கள் வீறு கொண்டு எழுவதற்கான முயற்சிகளை அங்குள்ள தமிழர் தலைவர்கள் எடுத்து வருகிறார்கள்.

இலங்கைத் தமிழர்களின் விடுதலை வேட்கை யுணர்ச்சி மிகவும் போற்றிப் பாராட்டி வரவேற்கத்தக்கதாகும். இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகள் வெற்றிபெறத் தாய்த் தமிழகத்திலுள்ள தமிழர்கள் அனைவரும் தங்களாலான நல் ஆதரவையும், ஊக்கத்தையும், வாழ்த்துக்களையும் அளிப்பார்கள் என்பது உறுதி. இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகள் அனைத்தும் நேர்மையானவை—நீதியானவை—சனநாயகப் பண்பு நிறைந்தவை என்பதை உலக நடுநிலையாளர்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளவே செய்வர்.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் எல்லாவற்றையும் காப்பாற்றும் வகையில் இலங்கைத் தமிழ்ப்பகுதி தனி நாடாக இலங்க வேண்டும் என்றும், கூடுமானால் தமிழ்ப் பகுதியும் சிங்களப் பகுதியும் சமதகுதியில் கூட்டாட்சியில் இணைந்திருக்கலாம் என்றும், இல்லையேல் தமிழ்ப் பகுதி தனி சுதந்திர நாடாக அமையவேண்டும் என்ற முறையில் தமிழ்த் தலைவர்கள் விடுதலைக் கருத்துக்களைத் தூவி வருகின்றனர். இலங்கைத் தமிழ்ப் பகுதி ஒரு காலத்தில் தனி நாடாகப் பிரிந்து, தாய்த் தமிழகத்தோடு இணைந்து கொண்டால்கூட நாம் வியப்படைவதற்கில்லை. அந்த அளவுக்கு விடுதலை வேட்கையுணர்ச்சி அங்கு வீறுகொண்டு எழத் தொடங்கிவிட்டது.

இலங்கைத் தமிழர்கள் தம் முயற்சிகளில் வெற்றிபெறுவார்களாக! நம் மனமுவந்த வாழ்த்துக்கள் அவர்களுக்கு உரியவாக!

***

பொங்கல் திருநாளை முன்னிட்டு வாழ்த்துக்கள் அனுப்பி எம்மை மகிழ்வித்த அன்பர்கள் அனைவருக்கும் எம் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். அனைவருக்கும் எம் வாழ்த்துக்கள் உரியவாக!

இரா. நெடுஞ்செழியன்.

கருத்துக் கதிர்

ஆச்சாரியாரின் தெளிவுரை

சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரின் பல கொள்கைகள் நம்மால் வெறுத்துத் தள்ளப்பட வேண்டிய—மூடபக்தி—குருட்டு நம்பிக்கைக் கொண்டவைகளாக இருந்தபோதிலும், சிற்சில கொள்கைகள் பாராட்டிப் போற்றப்பட வேண்டியவைகளாக அமைந்து விடுகின்றன. அப்படிப்பட்ட சிலவற்றில் ஒன்றுதான், அவர் அண்மையில், தமிழ்க்கிழமை இதழ் ஒன்றில், இந்தியாவின் அரசியல்—பொதுமொழி எதுவாக இருக்கலாம் என்று எழுதி யிருப்பதாகும்.

இந்தியாவில் அந்தந்த மாநிலங்களின் ஆட்சி, அந்தந்த வட்டார மொழிகளாலேயே நடைபெற வேண்டும்; இந்திய அரசாங்க மொழி ஆங்கிலமாகவே இருக்க வேண்டும்; மாநிலங்களுக்கிடையே நிலவும் பொதுமொழி ஆங்கிலமாகவே இருக்க வேண்டும் என்னும் கருத்துப்பட அன்பர் ஆச்சாரியார் எழுதியுள்ளார்.

அகில உலகப் பொதுமொழியாகவும், அறிவியலை உணர்த்தும் அரும்மொழியாகவும், உலகத் தொடர்பை ஏற்படுத்தித் தரும் உயர் மொழியாகவும் இருந்துவரும் ஆங்கிலமே இந்தியத் துணைக்கண்டத்தின் பொதுமொழியாகவும், பின்னால் அமையப் போகும் திராவிடத்தின் பொதுமொழியாகவும், இந்தியா—திராவிடம் ஆகியவற்றின் அரசியல் மொழியாகவும் இருக்கலாம் என்றும், அந்தந்த மாநில ஆட்சி அந்தந்த மாநில மொழியிலேயே நடைபெற வேண்டும் என்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம் அடிக்கடி வற்புறுத்திக் கூறி வந்துள்ளோம். அதன்படி தமிழர்க்குத் தாய்மொழியும்—வட்டாரமொழியுமான **தமிழும்** அகில உலகப் பொதுமொழியான ஆங்கிலமும் மட்டும் இருந்தால் போதும்; வேறு எந்த மொழியின் தயவும் தேவையில்லை என்றும் சொல்லி வந்தோம்.

நாம் பல ஆண்டுகளாகக் கூறி வந்துள்ள கருத்தை அப்படியே எதிரொலிப்பதுபோல் ஆச்சாரியார் கூறமுன் வந்திருப்பது மிகவும் போற்றிப் பாராட்டி வரவேற்கத் தக்கதாகும். ஆச்சாரியாரின் மொழிபற்றிய இந்த நல்லுரை, தென்னாட்டுப் படித்த மக்களுக்குக் குறிப்பாகப்

பார்ப்பனத் தோழர்களுக்கு நல்ல தெளிவைப் பயக்கும் என்று கருதுகிறோம்—பயக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆச்சாரியார் போன்றே, சர். சி.வி. இராமன் அவர்களும் பிற பேரறிஞர்களும் ஆங்கிலமே இந்தியாவின் பொதுமொழியாகவும் அரசியல் மொழியாகவும் இருக்கலாம் என்று வற்புறுத்திச் சொல்லி யிருப்பதும் போற்றிப் பாராட்டப்பட வேண்டியதாகும்.

அன்பர் ஆச்சாரியார் எழுதி யிருப்பதில் முக்கியமான கருத்துக்கள் வருமாறு:

"அரசியல் மொழி, அதாவது ராஜ்யாந்தர மொழி எதுவாக இருக்கவேண்டும் என்று யோசிக்கும்போது ஆங்கிலத்தை ஏன் நாம் இப்போது நீக்க வேண்டும்? ஆங்கிலத்தைப் பரஸ்பர ராஜ்ய மொழியாக வைத்துக் கொள்வதால், ஏதொரு அவமானமும் இல்லை.

"அமெரிக்கப் பெருநாட்டில், ஆங்கில ஆட்சிக்கு உட்படாத அந்தப் பெரும்நாட்டில், பல பாஷைகள் பேசும் மக்கள் குடியேறிய அந்த நாட்டில், ஆங்கிலம் கட்டாய அரசியல் மொழியாகிப் பயின்று வருவது அனைவரும் அறிந்த விஷயம். ஐரோப்பாவில் நார்வே, ஸ்வீடன் முதலிய முன்னணி நாடுகளில் ஆங்கிலம் பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்குக் கட்டாயப் படிப்பு. நாமும் இந்நாட்டில் இருநூறு ஆண்டுகள் அந்த மொழியைப் படித்தும்நல்ல முறையில் கையாண்டும் விட்டு விடமனமில்லாத அளவுக்கு அதில் பற்றுக் கொண்டு வந்திருக்கிறோம். யாருடைய கட்டாயத்தின் பேரில் நாம் இதை விட்டு விடவேண்டும்? ஆங்கிலேயர்கள் தங்களுடைய பொருளைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லவில்லை, மற்ற துறைகளில் நாம் ஆங்கில நடைமுறைகளை வைத்துக்கொண்டே வருகிறோம். அவற்றில் மானக்குறைவு இல்லையானால், மொழியைப்பற்றி நாம் கூச்சம் அடைய வேண்டிய அவசியம் கொஞ்சமும் இல்லை. கணக்கெடுத்துப் பார்த்தால் சின்னஞ்சிறு உத்தியோகங்களுக்குத் தகுந்த கல்வி அடைந்த எல்லாரும், இந்தியா முழுவதிலும் எந்தப் பிரதேசத்திலும் ஆங்கிலம் படித்தே இருக்கிறார்கள். நன்றாக வழங்கியும் வருகிறார்கள். படித்த இனத்தவர்களில் ஆங்கிலந்தான் பொது பாஷை. கையிலிருக்கும் கெட்டிப் பொருளை ஏன் எறிந்துவிட்டுப் புதுப் பொருளைத் தேடி அலைய வேண்டும்?

"அதிகார வர்க்கத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையில் இருவர்க்கத்தினருக்கும் தெரிந்தமொழி ஒன்று அரசியல் மொழியாக இருப்பது நன்மைதான். ஆனால் ஹிந்தியை அரசியல் மொழியாக்குவதில் இந்த நன்மை தென்னாட்டில் உண்டாகாது. ஹிந்தியே தாய் பாஷையாக இருக்கும் பிரதேசங்களில் இந்த நன்மை உண்டாகும். எனவே, பாரபட்சத்துக்கு இடமாகும். ராஜ்ய உள் நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் அந்தந்த பிரதேச பாஷையைப் பயன்படுத்துவதே முறை. அந்த அளவில் அதிகார வர்க்கத்தாரின் அரசியல் மொழியும், மக்கள் பேசும் மொழியும் எல்லாப் பிரதேசங்களிலுமே ஒன்றாகும். ஒரு ராஜ்யத்துக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் நடைபெறும் எழுத்துக்கள் ஆங்கிலத்தில் இருப்பதனால் தென் மக்களுக்கு அநுகூலமே ஒழிய, இடைஞ்சல் இராது. ஹிந்தியில் நடவடிக்கை நடத்த வேண்டுமானால், தென்ராஜ்யங்களிலும் ஹிந்தியை நன்றாக அறிந்தவர்களை வைத்துக் கொண்டுதான் வேலை செய்ய வேண்டியதாகும். வெளிப் பிரதேசங்களிலிருந்து உத்தியோகஸ்தர்களைத் தருவித்துக்கொள்ள வேண்டியதும் ஆகும். அதில் எவ்வளவு அசௌகரியங்களும், பிழைகளும் ஏற்படும் என்பது சொல்லாமலே விளங்கும். "அந்தர ராஜ்ய நடவடிக்கைகள் ஆங்கிலத்திலேயே இனியும் நடைபெற்று வரவேண்டும்' என்று கோருவதே தென்னாட்டினரின் நன்மைக்கு உகந்ததாகும்'

"உலக விவகாரங்களிலும், வல்லரசுகள் மகாநாடுகளிலும், ஆங்கிலத்தைத்தான் நாம் கையாண்டுவந்திருக்கிறோம். அதை மாற்றுவது இயலாது. மாற்றுவது நன்மையும் ஆகாது. அதற்கு என்று ஆங்கிலம் படித்த தனி அதிகார வர்க்கத்தினரை வைத்துக்கொண்டு இயங்க முடியுமா? எந்தக் காரணத்தைக் கொண்டு பார்த்தாலும் இந்தியாவுக்கு ஆங்கிலமே அரசியற் பொது மொழியாகத் தொடர்ந்து வழங்குவது அவசியமாகும். ஹிந்தி பிரதேசங்களில் ஹிந்தியே பிரதேச அரசியல் மொழியாக இருக்கவேண்டும். அப்படியே அந்த அந்தப் பிரதேசங்களில் அந்தஅந்தப் பிரதேச மொழிகளே ராஜ்ய நிர்வாக மொழியாக இருக்க வேண்டும். ஆனால் ராஜ்யங்களுக்கிடையில் நடைபெற வேண்டிய விஷயங்களுக்கு ஆங்கிலந்தான் அரசியல் மொழியாகத் தொடர்ந்து வழங்க வேண்டும். எல்லாக் கொள்கையினரும் ஒன்று சேர்ந்து இந்த முடிவுக்கு வந்து வழவழப்பின்றி உறுதியாக ஏகோபித்து நின்றால், ஆபத்தைத் தவிர்க்கமுடியும். காலம் தாண்டிவிட்டது என்று, பேசுவதற்குப் பயந்து கஷ்டத்திற்கு உள்ளாக வேண்டியதில்லை.

"இந்தப் பிரச்சினை கட்சிப் பிரச்சினையல்ல. பாரபட்சமின்றி சாவதானமாக ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டிய பொதுப் பிரச்சினை."

வினாவும் விளக்கமும்

வினா : விஞ்ஞான வளர்ச்சியிலும் பொருளாதாரத் துறையிலும் மேம்பட்டு நிற்கும் அமெரிக்காவிலும் சமய வளர்ச்சி பெருகி வருகின்றதைத் தாங்கள் அறிவீர்களா? அங்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு **2,28,880** ஆலயங்களும், **4,65,90,000** வழிபடுவோரும் இருந்ததாகவும், தற்சமயம் **2,81,511** ஆலயங்களும் **8,88,30,000** வழிபடுவோர்களும் இருப்பதாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே பகுத்தறிவு வளர வளர பக்தியும் வளர வேண்டாமா?

[இது அருள்நெறித் திருக்கூட்டத்தின் எட்டாவது கேள்வி]

விளக்கம் : விஞ்ஞான வளர்ச்சியிலும், பொருளாதாரத் துறையிலும் மேம்பட்டு நிற்கும் உருசியாவில் சமய வளர்ச்சி குன்றிக்கொண்டு வருவதைத் தாங்கள் அறிவீர்களா? என்றும், நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் அங்கிருந்த கோயில்களின் எண்ணிக்கையும், வழிபடுவோரின் எண்ணிக்கையும் இப்பொழுது மிகவாகக் குறைந்துகொண்டு வருவதைத் தாங்கள் அறிவீர்களா? என்றும், பகுத்தறிவு வளர வளரப் பக்தி குறைந்துகொண்டு வரவேண்டாமா? என்றும் அருள்நெறித் திருக்கூட்டத்தாரை நாம் திரும்பக் கேட்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

அமெரிக்கா விஞ்ஞான வளர்ச்சியுறுவதற்கும், பொருளாதாரத் துறையில் மேம்பாடு எய்துவதற்கும் 'பகுத்தறிவு' வளர்ச்சிதான் காரணமாக இருந்திருக்கிறதே ஒழிய ஆண்டவனிடம் கொண்ட 'பக்தி' காரணமாக இருக்கவில்லை. அதனால்தான் அமெரிக்காவைப்போல் அவ்வளவு 'பக்தி' கொள்ளாத உருசியாவும் 'பகுத்தறிவின்' துணையோடு அறிவியல்—பொருளியல்—சமூகவியல் ஆகியவற்றில் மிக மேம்பட்டு நிற்க முடிகிறது.

ஆப்பிரிக்கா—தென் அமெரிக்காக் காடுகளிலும், ஆங்காங்குள்ள மலைகளிலும் காணப்படும் காட்டுமிராண்டிகள், 'கடவுள் பக்தி'யில் அமெரிக்கர்களைக் காட்டிலும் எந்த அளவிலே குறைந்தவர்கள் என்று சொல்ல முடியும்? தங்களுடைய உயிரையும், தங்களுடைய உடைமைகளையும் ஆண்டவனுக்கு அப்படியே காணிக்கையாக்கும் வகையில் காட்டுமிராண்டிகள் தமது களங்கமற்ற 'பக்தி'யைக் காட்டித்தான் வருகிறார்கள். அப்படிப்பட்ட களங்கமற்ற 'பக்தி'யைக் காட்டியும், அவர்கள் பொருளாதாரத் துறையிலும், அறிவியல் வளர்ச்சியிலும் மேம்பட்டதாகத் தெரியவில்லை. எனவே ஒரு நாட்டின் மக்களைப் பொருளாதாரத் துறையிலும், அறிவியல் துறையிலும் உயர்நிலையடையச் செய்ய உறுதுணை புரிவது 'கடவுள் பக்தி' அல்ல, இயற்கை ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொள்ளும் 'பகுத்தறிவே' ஆகும் என்பது பெறப்படும்.

அமெரிக்காவில் கோவில்களின் எண்ணிக்கையும், ஆண்டவனை வழிபடுவோர் எண்ணிக்கையும் முப்பது ஆண்டுகளில் பெருகியுள்ளதாக வினா எழுப்புவோர் குறிப்பிடுகின்றனர். மக்கள் எண்ணிக்கை பெருகப் பெருகக் கோயில்களின் எண்ணிக்கையும், வழிபடுவோரின் எண்ணிக்கையும் பெருகத்தானே செய்யும். இதில் வியப்பு என்ன இருக்கிறது? கூடுதலான எண்ணிக்கையினர் அனைவரும் ஒரு காலத்தில் கடவுள் நம்பிக்கையற்றவர்களாக இருந்தார்கள், இப்பொழுது வழிபடுவோராக மாறிவிட்டனர் என்று விளக்கிக் காட்டி, அதன் மூலம் சமய வளர்ச்சி பெருகியிருப்பதை அருள்நெறித் திருக்கூட்டத்தார் சுட்டிக் காட்டியிருப்பார்களேயானால் அதில் பொருள் இருக்கமுடியும். வைதீக மக்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளின் பெருக்கம் வைதீகத்தைச் சார்ந்திருக்கின்றன என்று உணர்த்துவதில் என்ன வியப்பு இருக்கிறது?

முற்காலத்திலும், இடைக்காலத்திலும் சமயங்கள் ஆங்காங்குச் செலுத்தி வந்த ஆதிக்க ஆட்சி, சில இடங்களில் மிக மிகக் குன்றியும், பல இடங்களில் அடியோடு அற்றும்போய் விட்டது என்னலாம். வேறு அமைப்புக்கள் ஏற்படாத காலத்தில் 'கடவுள் பக்தி'யை அடிப்படையாகக் கொண்ட சமய அமைப்புக்கள் மக்களுக்குத் தேவையான நன்மைகளையும்

பணிகளையும் புரிந்து வந்தன. இப்பொழுது 'கடவுள் பக்தி'யைப்பற்றிக் கவலைப்படாத அரசியல் அமைப்புக்கள்—சமூக நலக் கழகங்கள்—உலக அமைப்புக்கள் போன்றவைகள் மக்களுக்கான நன்மைகளையும், தொண்டுகளையும் செய்யத் தொடங்கிவிட்டன. சமய அமைப்புகள் பின் தள்ளப்பட்டு பெயருக்கு இருந்து வருகின்றன. இடைக் காலங்களில் சமயங்கள் வாழ்ந்த வாழ்வையும், இப்பொழுது சமயங்கள் வாழும் வாழ்வையும் உற்றுநோக்கினால், சமயங்கள் எவ்வளவு வலிவிழந்து—பொலிவிழந்து—வளமிழந்து—வாழ்விழந்து—ஆதிக்கமிழந்து—உருட்டல் மிரட்டல் இழந்து—ஆதிகாலச் சாத்திர சம்பிரதாயங்கள் இழந்து வளர்ச்சி குன்றிக் காணப்படுகின்றன என்பது எளிதில் புலனாகும்.

'சமய வாழ்வு' என்பது பலர்க்குப் பொழுது போக்குப் பற்றுக்கோடு ஆகிவிட்டது. கோயில்களின் எண்ணிக்கையையும், வழிபடுவோரின் எண்ணிக்கையையும் காட்டி 'கடவுள் பக்தி'யின் பெருக்கத்தைக் காட்ட அருள்நெறித்திருக்கூட்டத்தார் முந்துகிறார்கள் என்றால், அவையெல்லாம் 'பக்தி'யிடத்து மக்களுக்கிருக்கும் பற்றைக் காட்டிலும், 'வேடிக்கை — களியாட்டம் — காமம்' ஆகியவற்றிடத்து மக்களுக்கிருக்கும் பற்றைத்தான் மிகவாகக் காட்டுகிறது. ஆகையால் தான் கோயில்களெல்லாம் மூடபக்தியற்ற—குற்றமற்ற பொழுதுபோக்கு இடங்களாகப் பகுத்தறிவு அடிப்படையில் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று பகுத்தறிவாளர்கள் கூறுகிறார்கள்.

அமெரிக்கா அறிவியல் துறையிலும், பொருளியல் துறையிலும் வளர்ச்சியுற்றிருப்பதற்குக் காரணம் 'பகுத்தறிவே' ஒழிய 'கடவுள் பக்தி' அல்ல என்பதையும், பகுத்தறிவு வளர வளர 'மூடப் பக்தி' குறைய வேண்டும் என்பதையும், கோயில்களும்—வழிபடுதலும் மக்களின் நல்வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படுவன அல்ல என்பதையும் இனியேனும் அருள் நெறித் திருக்கூட்டத்தார் உணர்வார்களாக!

ஃ ஃ ஃ

வினா: "வீட்டு எசமான், துடப்பக்கட்டையை எந்த அளவில் மதிப்பானோ, அந்த முறையில்தான் திருச்சபை திராவிட கழகங்களை மதிக்கும்" என்று கத்தோலிக்கப் பாதிரியாரான விசுவாசம் எழுதியுள்ளாரே அதுபற்றிய கருத்து என்ன?

விளக்கம்: கத்தோலிக்கச் சாமியாரான விசுவாசம் அவர்களின் மனம் எவ்வளவு இழிந்த தன்மையதாக ஆகியிருக்கிறது என்பதைத் அவர் எடுத்துக் காட்டும் உவமையிலிருந்து நன்கு அறிந்து கொள்ளலாம். சமயவெறி அவரை அந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கிறது; வாதிட்டு வெல்ல முடியாத கருத்து வேற்றுமையாளர்களைக் காணும்போது, அவருக்கு அறிவுத் தெளிவைவிட ஆத்திரந்தான் பொங்கி எழுகிறது; எனவே இழிந்த சொற்களில் தமது உள்ளத்தைத் தோய்த்து எடுத்துக் கழகங்களின்மீது வீசிச் சமய வெறியாட்டம் ஆடிப் பார்க்கிறார்! ஆடிப் பார்க்கட்டும்!

"துடப்பக்கட்டை" என்று சொல்லி ஏசும் பண்பு இழிந்த மக்களுக்கு வரலாமே யொழிய, ஏசுவின் நெருங்கிய தொண்டரான ஒரு பாதிரியாருக்கு வரலாமா?" என்று சிலர் கேட்கக் கூடும். கத்தோலிக்கச் சமயம் அவருடைய உடுப்புகளை மாற்றி—நிலையை மாற்றியிருக்கிறது; ஆனால் அவருடைய இழிந்த இயற்கைப் பண்பை மாற்றவில்லை; அதனால் மாற்ற முடியவில்லை. அவர் நிலைமை குறித்து நாம் கழிவிரக்கம் கொள்வோமாக!

திராவிட முன்னேற்றக் கழகத்தையும், திராவிடக் கழகத்தையும் விசுவாசச் சாமியார் 'துடப்பக் கட்டை' என்று குறிப்பிடுவதற்காகக் கவலைப்படவேண்டியதில்லை. 'துடப்பக் கட்டை' நிலையிலிருந்தே அவரைக் காண்போம். அவர் சேர்ந்திருக்கும் 'திருச்சபை' எசமான் போலவும், நாம் சேர்ந்திருக்கும் 'கழகம்' துடப்பக் கட்டை போலவும் கருதிக் கொண்டு அவர் பேசுகிறார். 'துடப்பக்கட்டை' பொதுவாக எசமானனுக்கு அடங்கி அவன் அசைக்கிறபடி அசையும். ஆனால் 'திருச்சபை'க்கு அடங்கியோ அல்லது, அது சொல்லுகிறபடி ஆடியோ வாழ்வது அல்ல 'கழகம்' என்பது பலர்க்கும் தெரியும். 'திருச்சபை' கழகத்தை எதிர்ப்பதாகச் சாமியார் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். அதாவது எசமான், துடப்பக் கட்டையை எதிர்க்கிறார் என்று பொருள். எசமான் துடப்பக் கட்டையின்மீது விழுந்தாலும் சரி, அல்லது துடப்பக்கட்டை எசமான் மீது விழுந்தாலும் சரி, எசமானுக்கு என்ன கிடைக்குமோ, அதுதான் 'திருச்சபை'க்கும் கிடைக்கும் என்பதைச் சாமியார் ஒப்புக்கொள்கிறார் போலும்! விசுவாசச் சாமியாரே கழகத்தைத் துடப்பக் கட்டை என்று கருதி மோத வந்தாலும் சரி, அல்லது துடப்பக்கட்டையே அவரை எதிர்த்து அவர்மேல் விழுந்தாலும் சரி, அதன் விளைவாக ஏராளமான 'பரிசுகள்' சாமியாருக்குக் கிடைக்கும் என்பது மட்டும் தெளிவு! துடப்பக்கட்டை எப்பொழுதும் கூட்டுக்கோலா

கவேஇருக்கும் என்று சாமியார் எண்ணியிருக்கிறார்போலும்; அதுவே அவருக்கு எதிராகத் தாக்குக்கோலாக மாறக்கூடும் என்பதை ஏனோ மறந்து விட்டார்?

விசுவாசச் சாமியார் நோக்கப்படியே பார்த்தாலும், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மக்கள் சேர்ந்த ஒரு 'துடப்பக்கட்டை' ஆகுமேயானால், அதேபோல் 'திருச்சபை' என்ற மக்கள் சேர்ந்த ஒரு அமைப்பும் ஒரு 'துடப்பக் கட்டை' ஆகத்தானே வேண்டும். இந்த இரண்டு துடப்பக்கட்டைகளில் எந்தத் துடப்பக்கட்டை கருத்து வலிவு பொருந்திய துடப்பக்கட்டை என்று பார்க்கவேண்டியது தான் பொதுமக்களின் கடமையாகும். அதனைக் காலத்தின் தீர்ப்புக்கு நாம் விட்டுவிடுவோம்.

விசுவாசச் சாமியார் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் 'துடப்பக்கட்டை' என்று தாராளமாகச் சொல்லிக்கொண்டிருக்கட்டும்; அதே நேரத்தில் அது தம்மைத் தாக்கத் துவங்கினால் எத்தகைய 'பரிசுகள்' தமக்குக் கிடைக்கும் என்பதையும் உணர்ந்து கொள்ளட்டும்!

கருத்து வேறுபாடுடையவர்களை இழிந்த சொல்லால் தூற்றும் தோழர் விசுவாசம் அவர்கள் எப்படி ஒரு கத்தோலிக்கச் சாமியார் ஆனாரோ? கத்தோலிக்கச் சமயந்தான் அவரை எப்படி ஏற்றுக்கொண்டதோ? இதுவும் சமயத்தின் இயல்பு போலும்!

* * *

வினா: **தி. மு. கழகம் கோரும் வடநாடு—தென்னாடு பிரிவினையால் டில்லியில் அரசியலார் பணிமனையில் பணியாற்றும் தென்னவரின் நிலைகெடாதா?**

விளக்கம்: தென்னவரின் நிலை அப்படியொன்றும் கெட்டுப் போய்விடாது.

பிரிவினை ஏற்படும்போது, வடநாட்டிலேயே வாழ்வை அமைத்துக்கொண்ட தென்னாட்டவர்க்கும், தென்னாட்டிலேயே வாழ்வை அமைத்துக்கொண்ட வடநாட்டவர்க்கும் தக்க பாதுகாப்பு ஏற்படும் வகையில்தான் உடன்
[illegible]
படிகளை இருநாட்டவர்க்கும் இடையே ஏற்படும். ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அரசியல் அறத்திற்கு மாறாக வன்முறையில் விரட்டியடிக்கும் நிலைமை ஏற்படாது.

வடநாட்டின் பணிமனைகளில் பணிபுரியும் தென்னாட்டவர்கள் தென்னாட்டிற்கு வந்துவிட நேரிடுமேயானால், அவர்களைத் தாங்கிக்கொள்ளும் வலிமையும், வளமும் பெற்றதுதான் திராவிடம். திராவிடத்தில் சுரண்டி வாழும் வட நாட்டவர்கள் அதேபோல் வடநாட்டிற்கு அனுப்பப்படும்போதும், புதியபணிமனைகளும், தொழிற்சாலைகளும் நிறுவப்படும்போதும், பெரிய பெரிய திட்டங்கள் உருவாக்கிடும் போதும் பணி செய்தற்குத் திராவிடத்தில் ஏராளமானவர்கள் தேவைப்படுவர். அப்பொழுது வடநாட்டிலிருந்து வருகிறவர்கள் அனைவர்க்கும் வேலை கொடுக்கும்படியான வாய்ப்பும் வசதியும் இங்கு ஏற்பட்டே தீரும்.

திராவிட நாட்டைச் சேர்ந்த பலர்க்குத் தீங்கும் சிலர்க்கு நன்மையும்தரும் இப்போதைய நிலைமை நீடிப்பதைவிட, பலர்க்கு நன்மையும், சிலர்க்குத் தீங்கும் ஏற்படுகிற நாம் எதிர்பார்க்கிற நிலைமை எல்லா வகையிலும் வரவேற்கத் தக்கதேயாகும்.

* * *

வினா: **தென்னாட்டில் பணம் படைத்தோர் பெரும்பாலோர் வடவர்; அவர் வடநாடு சென்றால் தென்னாடு தாழ்வுறாதா?**

விளக்கம்: தென்னாட்டில் வட நாட்டவர் போட்டிருக்கும் பணத்தைக் காட்டிலும், பன்மடங்கு மிகவான பணத்தை, அவர்கள் ஆண்டுதோறும், தென்னாட்டிலிருந்து சுரண்டி வடநாட்டிற்குக் கொண்டுபோய்க் குவிக்கிறார்கள். சுரண்டும் பணம் நின்றாலே அதுவே தென்னாட்டிற்கு மிகப் பயன்படுவதாக இருக்கும்.

மேலும் இப்பொழுது ஒரு சில வடநாட்டுப் பெரும் முதலாளிகளோடு போட்டிப் போட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் பல தென்னாட்டவர்கள், தங்கள் தங்கள் பணத்தை முதலீடு செய்யவும், கூட்டுறவு முறையில் பல தொழிற்சாலைகள் அமைக்கவும் நாடு பிரிந்தால் உறுதியாக வசதி ஏற்படும். இப்பொழுது வடநாட்டிற்குச் சென்று அவர்களுக்கும் பெரும் வகையில் பயன்பட்டுக் கொண்டிருக்கும் வரிப் பணங்கள், நாடு பிரிந்த பிறகு, திராவிடத்திலேயே தங்கும்படி நேரிடும் பொது புதிய உற்பத்திச்சாலைகளைத் தென்னாட்டிலேயே நிறுவிக்கொள்ளலாம்.

மேலும் குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் வெளிநாட்டு மூலதனம் திராவிட நாட்டில் நடமாட வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டாலும் படக்கூடும்.

திராவிடம் பிரிந்தால் வடவர் சிலரின் மூலதனம் போய்விடும் என்பதற்காகப் பிரிவினையை நாம் எப்படிக் கோராமல் இருக்க முடியும்? கடுகு போய்விடும் என்பதற்காகப் பூசணிக்காயை விட்டுக்கொண்டு இருக்கலாமா?

★ இசை வல்லுநர் மொசார்த் ★

இரா. செழியன்

வியன்னா! ஆஸ்திரிய சக்ரவர்த்தியின் அரண்மனை! வண்ண விளக்குகள் சுற்றிலும், மாளிகையில், மணி மாடத்தில், தோட்டத்தில் ஒளிவிட்டன. வெளியில் ஏராளமான கோச்சு வண்டிகள், அழகிய குதிரைகள் நின்றன. அன்று ஒரு விருந்து, அரண்மனை விருந்துக்கு வரும் பிரபுக்கள், சீமாட்டிகள் எண்ணிக்கைக்கு அளவில்லை. கூடியிருக்கும் கோச்சுவண்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க, புதிதாக ஒரு கோச்வண்டி வந்து சேர்ந்தது. பணியாள் கதவைத் திறந்தான். பிரபு கீழே இறங்கினார்; விருந்து மண்டபம் நோக்கி நடந்தார்.

விருந்து மண்டபம் நன்றாக அலங்கரிக்கபட்டிருந்தது. தோரணங்கள், மாலைகள், மணிச் சரங்கள், கண்ணாடிப் பட்டைகள் தொங்கின. விதவிதமான கண்ணாடிகிளேஸ்களில் வெளிச்சம் பரவியது. மண்டபத்தின் அழகை அதிகப்படுத்தும் விதத்தில், பட்டாடைகளும், வைர நகைகளும் ஒளிவிட்டன. ஆனால் என்றைக்குமில்லாதவாறு, விருந்து மண்டபத்தில் அமைதி நிலவியது. புதிதாக வந்த பிரபுவுக்கு அது ஆச்சரியத்தை அளித்தது. விருந்து நடந்தால், பேச்சுக்கும், சிரிப்புக்கும் வேடிக்கைக்கும், கூச்சலுக்கும் குறைவிருக்காது! ஆனால் இன்று...! வாயலில் கூட்டங் கூடி வழி மறைக்கப்பட்டிருந்தது. விலகிக் கொண்டு, உள்ளே பிரபு போக முயன்றார்!

'உச்' சென்று ஒருவர் பிரபுவைத் தடுத்தார். பிரபு வெளியில் நின்றார். உள்ளிருந்து இசை வந்தது. பிரபுவுக்கு இசை யென்றால் பிரியம் நின்று கேட்டார், இசை மெதுவாக ஆரம்பமானது. நரம்புகள் அசைந்தன, இசை பனியாக, நீராக, அருவியாகக் கடைசியில் வெள்ளமாகப் பாய்ந்தது. கேட்டோர்கள் மயங்கி நின்றார்கள். இசை! அற்புதமான இசை! ஆகா! பலர் இதற்கு முன் கேட்டறியாதது! புதிய முறை, புதிய வழிகள், இசை இழுத்துச் சென்றது, பறக்கச் செய்தது, கடைசியில் வெற்றிக்களிப்புடன் முடிந்தது! ஒரு கணம் அமைதி, கேட்டவர்கள் இசைதந்த மயக்கத்திலிருந்து எழவில்லை! பின் ஆரவாரம், இசை தந்த கலைஞனுக்கு பாராட்டு!

"உயர்ந்த இசை! சிறந்த இசைவல்லுவனாக இருக்கவேண்டும்!" பிரபு கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள் நுழைந்தார். கூட்டத்தினர் பாராட்டும் திக்கைப் பார்த்தார். சக்ரவர்த்தியின் பக்கத்தில் அந்த இசை வல்லுவனன்—என்ன? தன் கண்களை நம்பாமல், ஆச்சரியத்துடன் பிரபு பார்த்தார்! சக்ரவர்த்தியின் பக்கத்தின், சிறிய வயலினுடன் ஒரு சிறுவன்—ஆறுவயதுச் சிறுவன் : நின்றுகொண்டிருந்தான்!

"ஆறு வயதுச் சிறுவன், அவனா இவ்வளவு அபாரஇசையை அளித்தான்?' பிரபு பக்கத்திலிருந்தவரைக் கேட்டார்.

"அவன்! அந்தச் சிறுவன்தான் இவ்வளவு பெரிய மனிதர்களை நிற்கச் செய்துள்ளான்".

சக்ரவர்த்தி அவனைத் தட்டிக் கொடுத்தார். "இசையில் மாயவேலை காட்டும் என்னுடைய சிறு பையன்?" என்று, கூட்டத்தினருக்கு காட்டினார். சீமாட்டிகள் சிறுவனைச் சூழ்ந்து கொஞ்சினார்கள். பிரபுக்கள்—இசை நுணுக்கம் தெரிந்தவர் புகழ்ந்து பேசினார்கள்.

"அந்தச் சிறுவன் யார்?" ஒரு பிரபு கேட்டார்.

"உல்பாங்க் மொசார்த்!" பக்கத்திலிருந்த பிரபு பதிலிறுத்தார். அவருக்கு ஒரு பெருமை, மற்றவர்களைவிட முன்னதாகத் தனக்கு அந்தப் பையனைத் தெரியுமென்பதில்! மற்றவர்கள் அந்தப் பிரபுவைச் சூழ்ந்துகொண்டு கேட்க ஆரம்பித்தார்கள். பிரபு மிகத் தயாளத்துடன், தனக்குத் தெரிந்ததைச் சொன்னார்.

"அந்தப் பையன் என்னுடைய மாளிகைக்குப் பக்கத்து கிராமத்தில் இருக்கிறான்!"

"உங்களுடைய கிராமத்தைச் சேர்ந்தவனா?"

"இல்லை. மதக்குருவின் கீழ் அவன் அப்பா வேலை பார்க்கிறார்."

"ஆறு வயதுச் சிறுவன் அதற்குள் தனியாக இசை வாசிக்க முடிகிறதே!" பிரபுக்கள் ஆச்சரியத்துடன் சொன்னார்கள்.

"மூன்று ஆண்டுகள் கழித்து, இந்த ஆச்சரியத்தைப் பார்க்கிறீர்கள்! இந்தப் பையன் மூன்று வயதுச் சிறுவனாக இருக்கும் பொழுதே, அவன் இசை வாசித்து, நான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன்!"

* * *

மிகச் சிறுவயதில், தனது இசைப் புலமையால் வியன்னாவை, ஐரோப்பாவை, இசை உலகை மொசார்த் ஆச்சரியத்தில் ஆழ்த்தினான். அவனுடைய முழுப்பெயர் உல்பாங்க் அமாதே மோசார்த் என்பதாகும். அவன் இன்றைக்குச் சரியாக இருநூறாண்டுகளுக்குமுன் அதாவது, 1756-ம் ஆண்டு, சனவரி 27-ம் தேதி பிறந்தான். அவனுடைய தந்தை லியோபால்ட் மொசார்த் என்பவர் இசையில் ஓரளவு பயிற்சி பெற்று, அவருடைய கிராமத்துப் பிரபுவான மதக்குரு (ஆர்ச் பிஷப்பு)வின் மாளிகையில் வேலைக்கு இருந்தார். அந்தக் காலத்தில் பிரபுக்களைவிட அதிகச் செல்வாக்குடனும், ஆடம்பரத்துடனும் வாழ்ந்ததால், விருந்து, நடனம், சங்கீதம், முதலியவைகள் அடிக்கடி நிகழும். விருந்தினரை மகிழ்விக்க வேண்டி நடைபெறும் இசைக் கச்சேரிகளில் லியோபால்ட் மொசார்த் கலந்து கொள்வார். சில சமயங்களில், மாதாகோயிலில் ஆடம்பரமான ஆராதனைகள் இருந்தால் லியோபால்ட் அங்கும் வாசிப்பார். ஆதலால் அவருடைய மகன் உல்பாங்க் மொசார்த்துக்கு இளம் வயதிலிருந்தே இசைப்பயிற்சி பெறுவதற்கான சூழ்நிலை இருந்தது.

மகனுக்கு இசையில் ஈடுபாடு இருப்பது கண்ட தந்தை, அதை வளர்ப்பதில் அரும்பாடுபட்டார். அவனுடைய மூன்றாவது வயதிலேயே, கேட்டவர்களும் கண்டவர்களும் ஆச்சரியப்படும் விதத்தில் இசைக்கருவிகளைப் பிழையற வாசிக்கும் ஆற்றல் பெற்றான். நண்பர்களும் உற்றார் உறவினர்களும் வீட்டுக்கு வரும்பொழுது சிறுவன் மொசார்த்தும் அவனுடைய அக்காவான மேரியோமொசார்த்தும் இசைக்கருவிகளை வாசித்துக் காட்டுவார்கள். மேரியோ மொசார்த்தும் சிறுவயதில் இசைப்பயிற்சி பெற்றிருந்தாள் — சிறுவன் மொசார்த் அளவுக்கு உயரவில்லையென்றாலும் சாதாரண குழந்தைகளிடம் எதிர்பார்க்கக் கூடியதைவிடப் பன்மடங்கு அதிகமான இசைப்புலமை அவளுக்கும் இருந்தது.

சிறுவன் மொசார்த்தின் திறமைவியக்கத் தக்கதாய்—எவரும் நம்பமுடியாத அளவு உயர்ந்ததாய் இருந்தது. மூன்றாவது வயதில் இசைக்கருவியை வாசிப்பதுடன் அவன் நிற்கவில்லை. நான்காவது வயதில் தானாக ஒரு சிறு பாட்டுக்குப் பண்ணமைத்து வாசித்துக் காட்டினான்! கேட்டவர்கள் திகைத்து விட்டனர். பத்தாண்டு, இருபதாண்டு பயிற்சிக்குப்பின் கிடைக்கும் திறமை, அவனுக்கு மூன்றாவது, நான்காவது வயதிற்குள் வந்துவிட்டதென்றால்! சிறுவனுடைய இசையறிவு இசை நுணுக்கந் தெரிந்த பெரியவர்களை மலைக்கச் செய்தது.

மகனின் புலமையை வெளியுலகுக் காட்டிட, தந்தை தயங்கவில்லை. மொசார்த்தின் ஐந்தாவது வயதில், தனியாக சங்கீதக் கச்சேரி நடத்திக் காட்டினான்! பவேரியா நாட்டு மன்னர் நடத்திய இசை விழாவில், மொசார்த்—அந்த ஐந்து வயதில் தனது இசையைப் பரப்பினான், புகழைப் பெற்றான். ஆறாவது வயதில் அவனுடைய தாய் நாடான ஆஸ்திரியாவின் தலைநகரில், சக்ரவர்த்தியின் அரண்மனையில் மொசார்த் இசை விருந்தளித்தான். சக்ரவர்த்தி மகிழ்ந்தார், பிரபுக்கள் ஆரவாரித்தனர்! "ஆறு வயதுச் சிறுவன் வியன்னாவைக் கலங்கச் செய்துவிட்டான். இசை வல்லுநர்கள் திகைக்கின்றனர், சீமாட்டிகள் தங்கள் மனதை அந்தச் சிறுவனிடம் இழந்துவிட்டனர், சக்ரவர்த்தி அவனை அருகே அமர்த்திக் கொண்டு 'இசைக்கலையில் மாய வேலை காட்டும் எனது சிறுவன்' பாராட்டுகிறார்" என்று மொசார்த்தின் வியன்னா இசைக் கச்சேரியை நேரில் கண்டவர் கூறுகிறார். அதிலிருந்து சிறுவன் மொசார்த் அரண்மனைக்கு அடிக்கடி வரவழைக்கப்பட்டான். அவனை உபசரிப்பதில் அரண்மனைவாசிகளும், பிரபுக்களும் சிங்காரவல்லிகளும் போட்டி போட்டுக்கொண்டனர்.

ஒரு சமயம் அரண்மனையில் சிறுவன் வேகமாக வரும்பொழுது, பளிங்குத் தரையில் கால் நழுவி விழுந்து விட்டான். அப்பொழுது அருகில் வந்த ஒரு பெண் அவனைத் தூக்கி நிறுத்திவிட்டாள். அவனுக்கும் ஏறத்தாழ அவனுடைய வயதுதானிருக்கும். அவளுடைய உடைமட்டும், உயர்ந்த குடும்பத்து

பெண் என்பதைக் காட்டியது. அவள் கை கொடுத்து உதவியதும், சிறுவன் மொசார்த் எழுந்து நின்று, அவளுக்கு நன்றி கூறினன். மேலும் ஏதாவது அன்பான வார்த்தை சொல்லவேண்டுமென்று அந்த இளம் உள்ளத்துக்குத் தோன்றியது. சிறுமியின் கையைப் பற்றி "நான் பெரியவனனதும், உன்னை கல்யாணம் செய்துகொள்வேன்" என்று சொல்லிவிட்டு ஓடினன். அந்தச் சிறுமியும் சிரித்துக்கொண்டு போய்விட்டாள்.

தான் பேசிக்கொண்டிருந்தது யாரிடமென்று மொசார்த்துக்குத் தெரியாது. அவள்தான் ஆஸ்திரிய நாட்டு இளவரசி—பின்பு பிரெஞ்சு நாட்டு அரசியாக ஆனவள்—மேரி அந்தாய்னெட்! பதினறும் லூயி மன்னனின் மனைவியாகி, வார்செய்ல் அரண்மனையில் கோலாகலமாக ஆண்டு, பிரெஞ்சு நாட்டில் பெரும் புரட்சியைக் கிளறிவிட்ட அரச குடும்பத்தவள் அவள்! அந்த இளவரசியிடம் மொசார்த் அவ்வாறு பேசினன், அப்பொழுதிருந்த அவளுடைய உயர்வு தெரியாமல், பின்னல் அவளடையப் போகும் தாழ்வு தெரியாமல்!

லியோபால்டு தன் மகனையும், மகளையும் அழைத்துக்கொண்டு ஐரோப்பா முழுவதும் சுற்ற ஆரம்பித்தார். "ஆறு வயதுச் சிறுவன் அருமையாக இசை வாசிக்கிருனும்! தானகப் பண்ணமைத்துக் காட்டுகிருனும்! மேதாவி! இசையுலகின் புதுமை!" என்று ஆங்காங்கு கூட்டங் கூடியது. அலட்சியமாக வந்தவர்கள் மொசார்த்தின் இசையைக் கேட்டபிறகு அவனுடைய புலமையைப் பாராட்டிச் சென்றுர்கள். "சிறுவன் வாசிக்கிருன் என்பதற்காக இவ்வளவு ஆர்பாட்டங்கள்" என்று நினைத்து வந்தவர்கள் "பெரிய இசை ஞானியின் தீட்சண்யம் இந்தச் சிறுவனுக்கு இருக்கிறது" என்று ஒத்துக்கொள்ளவேண்டியிருந்தது.

மொசார்த்—ஆறு வயது சிறுவன் சென்ற இடமெல்லாம் புகழ் எதிர் கொண்டழைத்தது பாராட்டுரைகள் குவிந்தன! வெளியூர்களிலிருந்து வெளி நாடுகளிலிருந்து, அரண்மனைகளிலிருந்து, அரசர்களிடமிருந்து அழைப்புகள் வந்தன! முதலில் செர்மனியைச் சுற்றிவிட்டு, பின் உலந்தா நாட்டில் புகுந்து, பின் பிரெஞ்சு நாட்டுக்குள் மொசார்த் குழு புகுந்தது. பிரெஞ்சு நாட்டில் சில இடங்களில் இசையரங்கு நிகழ்ந்தபின், பாரிசு நகருக்குப் அவர்கள் புறப்பட்டார்கள்.

பாரிஸ்! 18வது நூற்றுண்டில், ஐரோப்பாவின் தலைநகராக—கலைவாணர்களின் தலைநகராக அது விளங்கியது! இசைக் கலையில் சிறப்படையும் எவரும் கனவு காண்பது, "ஒரு நாள் பாரிஸ் நகருக்குச் சென்று, பாராட்டு தலைப் பெறவேண்டும் என்பதாகும்! கிழக்கில் ருசியாவிலிருந்து மேற்கில் போர்த்துகல் வரையில், இசைவல்லுநர்கள், மேதகு சிறப்படைந்தோர் பாரிஸ் நகரில் குழுமியிருந்தனர்! மொசார்த் குழுவினர் பாரிஸ் நகரிலும் சிறப்பு அடைந்தனர்! சிறுவனின் வியத்தகு திறமை அங்கும் பாராட்டப்பட்டது. பிரெஞ்சு நாட்டு மன்னன் 15வது லூயி மொசார்த்தை அழைத்து, தன் அரண்மனையில் இசையரங்கு நடத்தினன். மொசார்தின் திறமையை வியந்து அனைவரும் போற்றினர்கள். ஒரு நாள் மொசார்த் குடும்பத்தினர்—தாய், தந்தை, சிறுவன் மொசார்த், அண்ணு மொசார்த், ஆகிய நால்வரும் அரண்மனையில் 15வது லூயி மன்னனல் தனி விருந்துக்கு அழைக்கப்பட்டனர். மூன்று மாதத்துக்கு மேல் மொசார்த் பிரெஞ்சுத் தலைநகரில், "இசையுலகச் செல்வனுக" இருந்தான்.

பின் பாரிசைவிட்டு, இங்கிலாந்துக்கு மொசார்த் குழுவினர் புறப்பட்டனர். இலண்டன் நகரில், ஜியார்த் மன்னர் அரண்மனையில்

பெருமளவில் விற்பனையாகிறது

பெரியார், அண்ணு, நெடுஞ்செழியன் படங்கள். 20" X 15" அளவில் நல்ல ஆர்ட் தாளில் சிறந்த முறையில் அச்சாகியுள்ளது. சொற்ப பிரதிகளே கைவசம் உள்ளன. தேவைக்கு உடனே எழுதவும்.

100-படங்கள் விலை ரூ. 20.

அனுப்பும் செலவு இனம்.

வி. பி. பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.

குறிப்பு :—50 படங்களுக்கு குறைந்த ஆர்டரை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆர்டர் தொகையில் 25-சதவீதம் முன்பணமாக அனுப்பிவைக்கவும்.

விவரங்கட்கு :—

செங்கதிர் பதிப்பகம்,

28, ஏழுகினறு தெரு, சென்னை-1

அவர்களுக்கு வரவேற்பு தரப்பட்டது. இங்கிலாந்தில் அவர்கள் ஓராண்டுக் காலம் தங்கியிருந்தனர். அரண்மனையிலும், பிரபுக்கள் மாளிகைகளிலும், முக்கியமான பொதுவிடங்களிலும் மொசார்த் இசைக் கச்சேரிகள் நிகழ்ந்தன. இங்கிலாந்தில் தங்கியிருந்த காலத்தில் இளைஞன் மொசார்த்துக்கு தனது இசைக் கலையை மேலும் செம்மையுறச் செய்வதற்கு நேரமும், வாய்ப்பும் கிடைத்தது. இசைத் துறையில் புகழ்பெற்ற சே. எசு. பாஃ என்பவரின் கடைசி மகனை சே. சி. பாஃ என்பவரின் நட்பு மொசார்த்துக்குக் கிடைத்தது. இதுவரையில் இயல்பாகவும், தந்தையின் பயிற்சியாலும் வளர்ந்திருந்த இசையறிவு, புதுத் திறமும், வலிவும் பெற்றது. சிம்பனி என்று சொல்லப்படும் தொடரிசைகளை ஆக்கும் ஆற்றல் மொசார்த்துக்கு வந்தது. இலண்டன் நகரில் தங்கியிருந்தபொழுது, மூன்று தொடரிசைச் சித்திரங்களை மொசார்த் எழுதி முடித்தான். அப்பொழுது அவனுக்கு வயது ஒன்பதுதான்!

இங்கிலாந்தைவிட்டு, உலந்தா நாட்டுக்குச் சென்று, பின் பாரிஸ், சுவிட்சர்லந்து, தென் செர்மனி வழியாக, தமது சொந்த ஊரான சால்சுபர்க்குக்கு மொசார்த் குடும்பம் திரும்பிவந்தது. இந்த நீண்ட சுற்றுப்பிரயாணத்தால், பொருள் வருமானத்தைக் கணக்கிட்டால் அதிகமாக மிஞ்சவில்லை. ஆனால் லியோபால்டு அந்த நோக்கத்துடன் ஐரோப்பாவின் மற்ற நாடுகளுக்குச் செல்ல முடியவில்லை. தனது சிறுவனின் மேதகு இசைப் புலமை, வெளிநாடுகளுக்குத் தெரியவேண்டுமென்பதாகும். அவர் எதிர்பார்த்ததைவிட அதிகமான அளவு பெருமையும், புகழும் சிறுவன் மொசார்த்துக்கு ஐரோப்பாவெங்கும் கிடைத்தது.

(அடுத்த இதழில் முடிவுறும்)

அண்டசராசரம்

இரா. செழியன், எழுதிவரும் "அண்டசராசரம்" தொடர்க் கட்டுரை இவ்விதழில் இடம் பெறவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

போட்டிப் பந்தயம்

ஒரு தோப்பில் பல ஆடுகள் கட்டப்பட்டிருந்தன. திடீரென்று புயல் கிளம்பி ஊரை நாசம்செய்து அழிவை ஏற்படுத்தியது. அந்தத் தோப்பில் இருந்த ஆடுகளில் ஒன்றைத் தவிர மற்ற யாவும் இறந்து கிடந்தன. மிகுந்த ஆடும், நோய் வாய்பட்டு, சிறுநீர், மலம், சகதி ஆகியவற்றில் உராய்ந்து மிக்கமுடை நாற்றம் வீசுவதாக ஆயிற்றாம்.

ஆட்டுக்குடையவர் ஆட்டிடம் நெருங்கி அதனை அவிழ்க்க இயலவில்லை. அதற்காக அவர் போட்டி ஒன்று ஏற்படுத்தி, யார் அந்தத் தீநாற்றம் வீசும் ஆட்டை அவிழ்த்துக்கொண்டு வருகிறார்களோ அவருக்குப் பரிசுகொடுப்பதாகக் கூறினாராம்.

போட்டியில் கலந்துகொள்ள மூவர் முன் வந்தனராம். ஒருவன் வெள்ளைக்காரன், மற்றொருவன் தமிழன், மற்றொருவன் வடநாட்டான்.

முதலில் வெள்ளைக்காரன் ஆட்டை அவிழ்த்து வர முற்பட்டான். ஆடு நூறு அடிக்கு அப்பால் இருந்தது. வெள்ளைக்காரன் இருபது, இருபத்தைந்து அடி தொலைவுதான் சென்றிருப்பான். அவனால் அதற்குமேல் முடை நாற்றத்தைப் பொறுத்துக்கொண்டு போக முடியவில்லை. திரும்பி விட்டான்.

இரண்டாவதாகத் தமிழன் புறப்பட்டான். அவனால் முப்பது அல்லது முப்பத்தைந்து அடிதான் போக முடிந்தது. அதற்குமேல் நகர முடியவில்லை. முடை நாற்றம் பொறுக்க முடியாமல் திரும்பி ஓடிவந்து விட்டான்.

பிறகு வடநாட்டுக்காரன் வந்தான். அவன் ஒரு நாற்பது அடி தொலைவு ஆட்டை நோக்கிச் சென்றிருப்பான், ஆனால் அதற்குள் ஆடு அறுத்துக் கொண்டு வேறு பக்கம் ஓடிவிட்டது.

பரிசை ஆட்டுக்குக் கொடுப்பதா, வடநாட்டானுக்குக் கொடுப்பதா என்று தெரியாமல், ஆட்டுக்குடையவன், அந்த இருவரின் முடை நாற்றத்தையும் தாங்கிக்கொள்ள முடியாமல் ஓடினான்! ஓடினான்!! ஓடியே போய்விட்டான்!!!

காதல் சிறந்ததா? பொருள் சிறந்ததா?

[எழினி]

மணம் ஆகிச் சிலநாட்கள்! அவன் மணக் கோலம் கலையாத மணமகனாகவே காட்சியளித்து வருகிறான்! மங்கையின் அழகிலே மயங்கிக் கிடக்கிறான். அவளை இமைப்பொழுதும் விட்டு அகல மனம் வராமல், அவன் எப்பொழுதும் இணைபிரியாமல் இருந்துவருகிறான்.

அவன் அவளது அழகிய தோற்றத்தையும், இனிய சாயலையும் அடிக்கடிப் புகழ்கிறான். அவள் வெண்ணிறங்கொண்ட காட்டு மல்லிகைப்பூவையும், பொன்னிறங்கொண்ட பாதிரிப்பூவையும் சேர்த்துக் கட்டப்பட்ட மாலையைக் கரிய கூந்தலில் பொலிவோடு புனைந்திருக்கிறாள். அதன் அழகு கண்டு மகிழ்வது, அப்பூக்களின் மணத்தையும் நறுநெய் தடவப்பட்ட கூந்தலின் மணத்தையும் நுகர்ந்து களிப்பது, அவளுடைய கூந்தலைத் தடவிக் கொடுத்து உவகையுறுவது, அவளுக்கு முத்தங்கள் கொடுப்பது, அவளது இனிய இதழ்களைச் சுவைப்பது, அவளது அழகுத் தேமல் படிந்த மார்புகளைத் தன் மார்போடு சேர்த்து இறுக அணைப்பதுபோன்ற இன்னபிற காதற்களியாட்டங்களில் திளைத்து இன்புற்றிருக்கிறான். கவலையற்ற காதல் வாழ்வில் நாட்களை இனிதே கழித்துக்கொண்டுவருகிறான்.

திருமண நிகழ்ச்சிக்கும், அதனைத் தொடர்ந்து நடத்திய ஆடம்பர வாழ்வுக்கும் மிக்க பொருள் செலவாகி வந்ததால், தலைவன் முன்பு சேர்த்துவைத்திருந்த பொருளில் பெரும்பகுதி கரைந்துவிடுகிறது. சேர்த்து வைத்திருந்த பொருள் குறைந்துவருகிறது என்பதையும், மேற்கொண்டு பொருள் சேர்த்துக்கொண்டு வந்து குவித்தால்தான். எதிர்காலவாழ்வு இனிமையாய், இன்பமாய் நடைபெற இயலும் என்பதையும் அவனது கடமையுள்ளம் மெல்ல அவனுக்கு உணர்த்தத் தொடங்குகிறது. அவனது உணர்ச்சியுள்ளமோ, அருமைத் தலைவியிடம் காதலின்பத்தை ஓயாமல் நுகர்ந்துகொண்டிருக்கும்படி அவனைத் தூண்டுகிறது.

அவன் தன் காதலியிடம் நெருங்கியிருக்கும் போது, அவனது உணர்ச்சியுள்ளம், அவனை முழுக்க முழுக்க ஆட்கொண்டு, அவனது கடமையுள்ளத்தை அவனருகே நெருங்க விடுவதில்லை. அப்பொழுதெல்லாம், உணர்ச்சியுள்ளம "நீ உன் அருமைக் காதலியைவிட்டு பிரிந்துபோகாதே!" என்று, தலைவனுக்கு அடுத்தடுத்து எடுத்து மொழிந்துகொண்டிருப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறது. இல்லத்தில் தலைவியை விட்டுத் தனியே இருக்கும்படியான நிலைமை தலைவனுக்கு ஏற்படும்போதெல்லாம், கடமையுள்ளம் அந்த நேரமாகப் பார்த்து அவனை நெருங்கி, "நீ இப்படியே வாளா இருந்துகொண்டிருந்தால், உனது எதிர்கால வாழ்வு துன்பத்தில் கிடந்து உழலும்படி நேரிடும்! அத்தகைய கேட்டை நீ தவிர்க்க வேண்டுமானால், விரைவில் பொருள்தேட நீ புறப்பட்டாகவேண்டும்! காலந்தாழ்த்தாதே! போ! மயங்காதே! உன் காதலியை விட்டுப் பிரிந்து போ! பிரிவதற்காகக் கவலைகொள்ளாதே!" என்று அறிவுரை கூறுகிறது.

அப்படிப்பட்ட பொழுதுகளில், "கடமையுள்ளத்தின் கூற்று எல்லாவகையிலும் பொருத்தமானதுதான்!" என்ற முடிவுக்குத் தலைவன் வருவது வழக்கம். கடமையுள்ளத்தின் பேச்சைக் கேட்டுத் தலைவன் வருவது வழக்கம். கடமையுள்ளத்தின் பேச்சைக் கேட்டுத் தலைவன் மயங்கியிருக்கிறபோதெல்லாம், உணர்ச்சியுள்ளம் அவனிடம் ஓடோடியும்வந்து, "நீ கடமையுள்ளத்தின் தீய சொற்

களைக் கேட்டுப் பாழ்பட்டுப்போய்விடாதே! நீ உன் காதலியைவிட்டுப் பிரிந்துபோய்விட்டால், காதலி உடனே உன்னைவிட்டு என்றென்றும் பிரிந்துபோய்விடுவாள்! உனக்குப் பொருள் பெரிதா? அல்லது காதல் பெரிதா? என்று நினைத்துபார்! உன் காதலி உயிரை விட்டபிறகு, நீ பொருளைக் கொண்டுவந்து என்ன செய்யப்போகிறாய்? நீ இன்ப வாழ்வில் வாழவேண்டுமானால் போ உன் காதலியிடம்! அவனைவிட்டுப் பிரிந்துசெல்ல கனவிலும் நினைக்காதே!'' என்று கூறும், உணர்ச்சி வயப்பட்ட தலைவன் வேறு வழியின்றித் தலைவியிடத்தில் சென்றுவிடுவான். இப்படியாகச் சிலநாட்கள் கழிகின்றன.

ஒருநாள் தலைவன், இல்லத்தின் ஒருபுறத்தில் தனியே உட்கார்ந்து நீடு சிந்தனையில் ஈடுபடுகிறான். அப்பொழுது கடமையுள்ளம்—உணர்ச்சியுள்ளம் ஆகிய இரண்டும் எதிர்பாராத விதமாக எதிர்ப்படுகின்றன. தலைவனைப் பொருள்தேடப் போகச்சொல்லிக் கடமையுள்ளம் வற்புறுத்துகிறது; போக வேண்டாம் என்று சொல்லி உணர்ச்சியுள்ளம் அவனைத் தடுத்து நிறுத்துகிறது. யார் சொல்லுகிறபடி நடப்பது என்று தெரியாமல் தலைவன் விழிக்கிறான். அதற்குள் கடமையுள்ளமும் உணர்ச்சியுள்ளமும் ஒன்றையொன்று எதிர்த்து நின்று உரையாடத் தொடங்குகின்றன. தலைவன் வாளா இருந்து அந்த உரையாடலை உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறான்.

உணர்ச்சியுள்ளம் : "உனக்குத் தலைவனிடத்தில் சிறிதுகூட அன்பு இல்லையே, ஏன்?''

கடமையுள்ளம் : "எனக்கா அன்பில்லை? அன்பு உனக்கில்லையா? எனக்கில்லையா? என்பதை ஊராரைக் கேட்டாலே, உடனே சொல்லிவிடுவார்களே!''

உணர்ச்சி : "உனக்கு அன்பு இருந்திருந்தால், காதலியை விட்டுப் பிரிந்துபோகும்படி தலைவனிடம் சொல்லுவாயா?''

கடமை : "அவளிடம் நான் அன்புகொண்டிருக்கும் காரணத்தால்தான் அவனைப் பொருள்தேடப் புறப்படச்சொல்லுகிறேன். ஆனால் நீயோ அவன் எக்கேடு கெட்டால் என்ன என்று வேலை செய்து வருகிறாய்!''

உணர்ச்சி : "அவனைப் பிரிந்துபோகச் சொல்லுவதுதான் அன்பின் அடையாளமா?''

கடமை : "அவன் பிரிந்து செல்லுவதை அல்ல, அவன் பொருள்தேடச் செல்லுவதைத்தான் நான் அன்பின் அடையாளம் என்கிறேன்!''

உணர்ச்சி : "பிரிவினால் தலைவன் தலைவிக்கு ஏற்படும் துன்பத்தைப் பற்றி நீ நினைத்துப்பார்க்கவே இல்லையா?

கடமை : "பிரிவினால் இருவர்க்கும் துன்பம் ஏற்படும் என்பதை உணர்கிறேன். ஆனால் பொருள்குறைந்து வறுமை ஏற்பட்டு அதில் உழலும்போது உண்டாகும் துன்பம் பிரிதலினால் ஏற்படும் துன்பத்தைக் காட்டிலும் மிகவாக இருக்குமே என்றுதான் அஞ்சுகிறேன்!''

உணர்ச்சி : "போயும் போயும் அவன் எவ்வளவு பொருள் ஈட்டிக்கொண்டுவந்துவிட முடியும் என்று கருதுகிறாய்?''

கடமை : "குளிர்கால வாழ்வுக்குத் தேவையான பொருள் ஈட்டிக்கொண்டுவரமுடியுமே!''

உணர்ச்சி : "பெரிய போர்வீரர்களுக்குத் தலைவனும், சிறந்த கொடைவள்ளலுமான ஓரியின் ஈகைக்குப் போதுமான அளவு பொருளைத் திரட்டுகிறான் என்றே வைத்துக்கொள்ளுவோம்! அதனால் என்ன பலன்?''

கடமை : "என்ன பலனா? பொருளில்லாமல் காதல் வாழ்வு இனிது நடைபெறாதே!''

உணர்ச்சி : "தலைவன் காதலியிடம் பெறும் இன்பத்தைக் காட்டிலும், நீ தேடச் சொல்லும் பொருளினால் கிடைக்கப் பெறும் இன்பம் எவ்வகையிலும் சிறந்ததாகாது?''

கடமை : "அந்தச் சிறந்த இன்பத்திற்கே பொருள்தான் அடிப்படையாகும். எனவேதான் அதனைத் தேடப் புறப்படச்சொல்லுகிறேன்!''

உணர்ச்சி : "ஏன் நீ ஓயாமல் தலைவனின் மனதைக் கெடுத்துக்கொண்டிருக்கிறாய்? நீ வேண்டுமானால் பொருள்தேடப் போ! நான் அவனைப் புறப்பட விடப்போவதில்லை!''

கடமை : "தலைவன் சிறிதுகாலம் போய்வருவதைத் தலைவி பொறுத்துக்கொண்டிருக்கக்கூடாதா?''

உணர்ச்சி : “ அவன் போய்த் திரும்பும் காலம் வரையில் தலைவி உயிரோடு இருந்தால் அல்லவா, அவள் பொறுத்துக்கொண்டிருக்க. அவன் புறப்படப்போகிறான் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட உடனேயே அவள் உயிரை விட்டுவிடப் போகிறாளே !”

உணர்ச்சியுள்ளம்—கடமையுள்ளம் ஆகிய இரண்டின் உரையாடலையும் கேட்டுக்கொண்டிருந்த தலைவன், தலைவி உயிரை விட்டுவிடுவாள் என்ற செய்தி காதில் விழுந்ததும், துடித்து எழுந்து, “ கடமையுள்ளமே! நான் உன்னோடு புறப்படுவதாக இல்லை ! இயன்றால் நீ மட்டும் வேண்டுமானால் போ! நான் உணர்ச்சியுள்ளம் சொல்லுகிறபடிதான கேட்டு நடக்கப்போகிறேன்! நீ எனக்கு இனிமேல் தொல்லை கொடுக்காதே! நினைக்கும்பொழுதெல்லாம் மகிழ்ச்சியூட்டும் தலைவியின் இன்பத்தைப்போல், நீ தேடச்செல்லும் பொருள் ஒருகாலும் தராதே! எனவே நீ மேலும் மேலும் என்னை வற்புறுத்திக்கொண்டு இங்கு நில்லாதே! போய்விடு!” என்று கடமையுள்ளத்தைப் பார்த்துக் கூறிவிட்டு, உணர்ச்சியுள்ளத்தை அழைத்துக்கொண்டு தலைவியிடம் போய்ச்சேருகிறான்.

தலைவன் போக்கு ஒழிந்தான் என்ற செய்தியைக் கேள்வியுற்றுத் தலைவி மிக்க மகிழ்ச்சி கொள்கிறாள் !

°° °° °°

நற்றிணை-52-ஆம் செய்யுளின் உட்கருத்தே மேலே விரிவாகச் சுட்டிக்காட்டப்பெற்றுள்ளது. இது தலைவன் தலைவியைவிட்டுப் பிரிய நினைந்து, பின்பு பிரியாமல் நின்றுகொள்ளுவது என்னும் பாலை ஒழுக்கத்தைச் சார்ந்த செய்யுளாகும். இதனை இயற்றியவர் பாலத்தனார் என்ற புலவராவார். இவரது இயற்பெயர் பாலத்தன். இவரை நப்பாலத்தனார் என்றும் அழைப்பர். இவர் பாலைத்திணையைப் பற்றிச் சிறப்பித்துப் பாடியுள்ளார். கடையேழு வள்ளல்களில் ஒருவனாகிய கொல்லிமலையை ஆண்ட வல்வில் ஓரியின் காலத்தவர் இவர். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாட்டுக்கள் காணப்படுகின்றன.

மாக்கொடி அதிரல் பூவொடு பாதிரித்
தூத்தகட்டு எதிர்மலர் வேய்ந்த கூந்தல்
மணங்கமழ் நாற்றம் மரீஇ யாமிவள்
சுணங்கணி ஆகம் அடைய முயங்கி
வீங்குவர்க் கவவின் நீங்கல் செல்லேம்
நீயே, ஆள்வினை சிறப்ப எண்ணி நாளும்
பிரிந்துறை வாழ்க்கை புரிந்தமை யலையே
அன்பிலை வாழியெம் நெஞ்சே வெம்போர்
மழவர் பெருமகன் மாவள் ஓரி
கைவளம் இயைவ தாயினும்
ஐதேகு அம்ம இயைந்துசெய் பொருளே.

[நற்றிணை—52]

[பொழிப்புரை : எமது நெஞ்சமே! கரிய கொடியையுடைய காட்டு மல்லிகைப்பூவுடனே தூய பொன்தகடுபோன்ற பாதிரி மலரையும் சேர எதிரெதிர்வைத்துத் தொடுத்துக் கட்டிய மலர் மாலையைச் சூடிய கூந்தலின் மணங்கமழும் நாற்றத்தைப் பெற்று யாம் இவளுடைய சுணங்கணிந்த மார்பில் கொங்கையை ஒருசேர அணைத்துக்கொண்டு மிக்க இன்சுவையையுடைய இவள் கையால்

அணைத்திருத்தலினின்றும் நீங்க இயலவில்லை; நீதானும் பொருள் தேடும் முயற்சியை மேம்படக் கருதி நாள்தோறும் எம்மைப் பிரிந்து தனித்து உறைகின்ற வாழ்வினை விரும்பிச் சிறிதுபொழுதும் ஓயமாட்டேனென்கிறாய்; ஆதலாலே, நீ என்னிடத்தில் அன்புடையயை அல்ல; இங்ஙனமே நெடுங் காலம் வாழ்வாயாக; நீ உட்கொண்டு உடன்பட்டு ஈட்டும் பொருள்தான், வெய்ய போர்செய்யவல்ல போர்வீரர் தலைவனாகிய சிறந்த கொடையையுடைய ஓரி என்பவனது ஈகைக்குப் பொருந்திய செல்வமே நீ ஈட்டும் பொருளாக நினக்குக் கிடைக்கப்பெறினும் அப்பொருள் இவளது முயக்கத்தைக் காட்டிலும் சிறந்ததல்ல, தெரிந்துகொள்வாய்; அது மிகக் குறைந்த மதிப்புடையதாகும்; ஆகையினாலே நீயே வேண்டுமென்றால் போவாய்; யாம் வருவதாயில்லை,

மாக்கொடி - கரிய கொடி; அதிரல் - காட்டு மல்லிகை; தகட்டு - பொன்தகட்டு; சுணங்கு - தேமல்; ஆகம் - மார்பு; கவவு - அகத்திடுவது; கையணைப்பு; மழவர் - போர்வீரர்; ஐது - மெல்லிது; ஆள்வினை - முயற்சி; உவர் - இனிய சுவை; அம்ம - வியப்பு.]

° ° °

கடமை வயப்பட்ட நெஞ்சத்தைத் தனியே நிறுத்தி, அதனோடு உணர்ச்சிவயப்பட்ட தலைவன் பேசுவதுபோல் புலவர் செய்திருக்கும் கற்பனைத்திறன், இச்செய்யுளில் மிகவும் அழகாக அமைந்துள்ளது. இளங்காதலர்கள் பொருளைவிடக் காதலின்பத்தையே சிறந்ததாகக் கருதுவர் என்பது இதன்கண் இனிது விளக்கப்பட்டுள்ளது.

கொல்லிமலையை ஆண்ட வல்வில் ஓரியின் வள்ளல் தன்மையைப் புகழ்வதற்குப் புலவர் இச்செய்யுளை ஒரு வாய்ப்பாகக்கொண்டு, ஏற்ற இடத்தில் வைத்து ஏற்றவிதமாகப் புகழ்கிறார். ஓரி எவ்வளவு பொருள்கள் கிடைத்தாலும் அவ்வளவு பொருள்களையும் வழங்கிவிடுவான் என்பதையும், அவன் வழங்கும் பொருள்களுக்குக் கணக்கே இல்லை என்பதையும் புலவர் மறைமுகமாக உணர்த்திக் காட்டுகிறார். பொருளின் ஒரு முடிந்த பெரிய அளவுக்கு, ஓரியின் ஈகைப்பொருளைச் சுட்டிக் காட்டியதிலிருந்து, அவனது வள்ளல் தன்மையை எளிதில் புரிந்துகொள்ளலாம். ஓரி வளாண்மையோடு, போர்புரியும் வன்மையும் கொண்டிருந்தான் என்பதை "வெம்போர் மழவர் பெருமகன்" என்ற சொற்றொடரால் உணர்த்துகிறார்.

காதலியை விட்டுப்பிரிய நினைக்கும் காதலனின் மனம் எப்படியெல்லாம் தடுமாற்ற நிலையை அடையும் என்பது இப்பாடலில் அழகுறப் படம்பிடித்துக்காட்டப்பட்டுள்ளது.

காட்டு மல்லிகைப்பூவோடு, பொன்னிறங் கொண்ட பாதிரிமலர்களைச் சேர்த்து மாலையாகத் தொடுக்கும் பழக்கம் இச்செய்யுளால் அறிவிக்கப்படுகிறது.

ஒரு ஓட்டலில், சாப்பிட வருவோர் கொண்டுவரும் குடைகளை வாங்கி பத்திரமாக வைத்திருந்து, செல்லும்பொழுது அவரவர் குடையை அவரவரிடம் கொடுக்கும் வேலையில் ஒரு பணியாள் அமர்த்தப்பட்டிருந்தான். அவன், தான் திறமைசாலி என்பதைக் காட்ட, குடைகளுக்கு அடையாளச் சீட்டுகள் வைக்காமல் குடைகளை சரியாக உரியவர்களிடம் கொடுத்து வந்தான்.

ஒருநாள் சாப்பிட்டுவிட்டுத் திரும்பிய ஒருவர் தன் குடையைக் கேட்க, அவரது குடையை சரியாக எடுத்துத் தந்தான் பணியாள்.

"இது எனது குடைதான் என்று எப்படி தெரிந்துகொண்டாய்?" என்று அவர் கேட்டார்.

"உங்களுடையதுதானு என்பது எனக்குத் தெரியாது சார்!" என்றான் பணியாள்.

"பின் எப்படி இந்தக் குடையை என்னிடம் கொடுத்தாய்?"

"நீங்கள் அதைத்தான் என்னிடம் கொடுத்தீர்கள். அதையே நான் திருப்பிக் கொடுத்தேன்!"

ஊமைப் பெண்

[புத்தனேரி ரா. வெங்கடாசலம்]

தோற்றத்திலே துடிப்பில்லை! உடையிலே கவர்ச்சியில்லை! உடலிலே தெம்பில்லை! அனைத்துக்கும் காரணம் அவன் உள்ளத்திலே மகிழ்ச்சியில்லை! நிலையில்லா நினைப்பிலே தனிமை நாடி பூஞ்சோலையின் ஒரு கோடியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான் அவன்—ஆறுமுகம், அவனுடைய நடையைச் சில குரல்கள் தடுத்தன. எங்குமே தனியிடம் கிடைக்காதோ என்று ஏங்கினான் அவன். நின்றான்.

“ரெங்கா! சீனுவுக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்தாயா? எதற்கும் யோகம் வேணும்பா. நீயும் நானும் இருக்கோமே—தரித்திரங்கள்!”

“ராமு! ‘அதிர்ஷடம்’ ‘யோகம்’ என்பவையெல்லாம் அர்த்தமற்றவை.”

“என்ன? அர்த்தமற்றவையா?”

“ஆமாம்பா. அப்படியே அதற்கு அர்த்தம் கூறுவதாயின் ‘கண்ணீர்க்கடல்’ என்று வேண்டுமானால் கூறலாம்!”

“எப்படி?”

“எப்படியா? அதிர்ஷ்டம் என்பது என்ன? நீ தெருவோடு போகிறாய். ஒரு தங்கச் சங்கிலியைக் கண்டெடுக்கிறாய். நீ நினைக்கிறாய்—கூறுகிறாய்—உன் அதிர்ஷ்டம் என்று. அதே போது அந்தச் சங்கிலியைத் தொலைத்துவிட்டுத் துயரத்தில் கண்ணீரைக் கக்கும் ஜீவனைப் பற்றி நீ நினைப்பதில்லை! அதுபோல் அநேகர் போட்டிகளுக்கு அரையும் காலுமாக அனுப்பி ஆயிரத்தையும் பதினாயிரத்தையும் எதிர்நோக்கி, ஏமாந்து வருத்தத்திலே கண்ணீர்வடிக்க சீனு இருபதினாயிரத்தைப் பெற்று ஆனந்தக்கண்ணீர் வடிக்கிறான்! ஒருவருடைய அதிர்ஷ்டம் பிறருடைய துன்பத்திற்குக் காரணமாகிறது. எனவே “கண்ணீர்க்கடல்” தான் அதிர்ஷ்டத்தின் அடிப்படை சரிதானா?

“ரெங்கா! அருமையான விளக்கமப்பா! எப்படியோ பணம் அவனுக்கு வளப்பமான வாழ்க்கையை அளித்துவிட்டதல்லவா?”

“பணம் வாழ்வை வளமாக்கவும் செய்யும் பாழாக்கவும் செய்யும்!”

“பணம் வாழ்வைப் பாழாக்குவதா?”

“ஆமாம்! உனக்குச் சான்று வேண்டுமா? நம்முடைய ஆறுமுகத்தை எடுத்துக்கொள். லட்சக்கணக்கான சொத்து மணத்தின்மூலம் கிடைத்தது. அவன் வாழ்வு வளப்பட்டதா? பணம் அவன் பாங்கான வாழ்வைச் சிதைத்து விட்டது. அவனிடமிருந்த உணர்ச்சிகள் அனைத்தையும் விரட்டிவிட்டு துயரக்கடலிலே உழலும்படி செய்துவிட்டது. அவன் நடைப் பிணமாக ஆகிவிட்டான். அவனுடைய அழகான தோற்றம் எங்கே? அன்பான பேச்செங்கே? துடிதுடிப்போடு ஓடி ஆடி நமக்கு விளையாட்டிலே வெற்றி வாங்கித்தந்தவன் இன்று துயரிலே வாடுகிறான். காரணம்? பணம்—பணத்திற்காக அவனுக்குச் செய்யப்பட்ட மணம்! புரிகிறதா?”

இதைக் கேட்டதும் ஆறுமுகம் பொருமினான். ஆத்திரமும் கோபமும் அழுகையாக மாறியது. ஒன்றும் பேசாது திரும்பி நடந்தான். அவன் உள்ளத் திரையிலே நடந்த பல சம்பவங்கள் தோன்றித் தோன்றி மறைந்தன.

* * *

“ஆறுமுகம்!”

“ஏம்மா?”

“ஏண்டா முகவாட்டமா இருக்கே? உன் மனசிலே இருக்கிறதைச் சொல்லிடப்பா! நீ நல்லா இருக்கணுங்கறதுதானே எங்கள் எண்ணம்.”

“ஒன்றுமில்லையம்மா!”

“இல்லை, எதையோ மறைக்கிறாய். உனக்கு இந்த மணத்தில் இஷ்டமில்லையா?”

“..................”

" ஏன்ப்பா மௌனம்? அப்படித்தானா?"

" இல்லையம்மா. நீங்கள் என்ன எனக்குத் தீங்கா நினைப்பீர்கள்?" ஆறுமுகம் இதைச் சொல்லுமுன் அவன் உள்ளத்தில் தோன்றிய பொன்மொழிகள் 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை. தாய்சொல் துறந்தால் வாசகமில்லை' என்பவை.

" அதுதானே கேட்டேன், நீதாண்டா உண்மையான பிள்ளை. பர்வதம்! நமக்கு ஒரே பிள்ளை என்று கவலைப்பட்டாயே! உருப்படாததுகள் பல இருப்பதைக் காட்டிலும் உத்தமனாக ஒருவன் இருப்பது எவ்வளவு மேல் என்று இப்போ தெரிஞ்சுக்கோ!" என்ற தந்தையின் பேச்சுக் காதில் விழவும் ஆறுமுகம் வெளியேறிவிட்டான். பெற்றோரின் சொல்லைத் தட்டும் அளவுக்கு அவன் உள்ளத்திலே உறமில்லை. அவன் 'பெற்றோரின் பிள்ளையாகவே' வளர்ந்தவன். அடங்காத்தனமும் அற்பத்தனமும் அவனிடம் என்றும் இருந்ததில்லை. சற்புத்திரனாகவே வளர்ந்தவன்—வளர்க்கப்பட்டவன். எனவேதான் பெற்றோரின் ஏற்பாட்டை எதிர்க்கவில்லை. 'பணத்தோடு பெண் வருகிறது. பெண் ஊமை என்றால் என்ன?' என்பது அவன் தந்தையின் பேராசை முடிவு. தாயின் எதிர்ப்பும் அவர் ஆசைப்பேயின்முன் மக்கி மடிந்துவிட்டது என்று தெரிந்தும் தான் எப்படி மறுத்துச் சொல்ல என மலைத்தான் ஆறுமுகம். மணம் முடிந்துவிட்டது; மகிழ்ச்சியும் மங்கிவிட்டது!

முதல் இரவு—புது வாழ்விலே அடியெடுத்து வைக்கும் மணமக்களுக்கு இன்பகரமான வரவேற்பளிக்கும் இரவு—ஆறுமுகத்திற்கு நல்லுணர்ச்சியை நல்கவில்லை. ஊமை என்றால் உள்ள எழுச்சிகளிலோ உடலுணர்ச்சிகளிலோ மாறுபாடு இருக்கவா செய்யும்? ஊடல் என்ற உயர்ந்த சொல் அவளுக்குப் புதுமையாக இருக்கலாம். ஆனால் பழக்கத்திலே சுழலும் 'பிகுவு' என்ற சொல் அவள் அறிந்தே இருந்தாள். ஆனால் அவள் எண்ணம் அவன் அறியவில்லை! அகம்பாவமும், அலட்சிய பாவமும் கொண்டவள் என நினைத்தான்—விலகினான். முதல்நாள் விலக்கம் இருவரிடையே தோன்றி இணைய வேண்டி 'அன்பு' என்ற அறுக்கமுடியாச் சங்கிலிகளின் இடைவெளியை மிகைப்படுத்தின. அவள் அன்போடு செய்த எந்தக் காரியமும் அவனுக்கு வெறுப்பையே வளர்த்தது.

'குழம்பிலே உப்பு அதிகமாக இருக்கிறது' என்று எரிந்தான் ஒருநாள். அவள் காதில் எப்படி விழுந்ததோ இன்னொரு கையளவு உப்பு குழம்பிலே கரைந்தது. வெகுண்டான் வேண்டுமென்றே செய்கிறாள் என்று. பறந்தது பாத்திரம். அவள் பதைபதைத்து வெறித்து நின்றாள்.

வீட்டிலே நிம்மதியில்லை என்று எண்ணிய அவன் ஒவ்வொரு நாளும் இரவு வெகுநேரம் கழித்தே வீட்டுக்கு வந்தான். கணவனைக் காணாத கவலையிலே வாயில் நிலையிலே நிலையாக நின்று எதிர்பார்த்தாள். "நீ என்ன வேசியா இரவிலே நிலையிலே நின்று கணவன்மார்களைத் தேட?" என்று ஏசினான். பயந்தவள் வீட்டோடு அடைந்து கிடந்தாள். அவன் வரும்போது அவள் தூங்குவதைப் பார்த்து, "வெளியே போனவன் என்ன ஆனான்? ஏன் வரலை? என்று கொஞ்சமாவது எண்ணமிருக்கா? எருமை மாதிரித் தூங்குகிறாளே! சீ!" என்று உறுமினான்!

ஒருநாள் இரவு நடுநிசிவரை கண்விழித்துவிட்டு விடியற்காலம் வெகுநேரம்வரை தூங்கினான். எழுப்பினால் கோபப்படுவாரே என்று என்று பயந்தவள் மாமியாரைக் கூப்பிட்டு எழுப்பச் சொன்னாள். அவன் எழுந்ததும் 'அவளை என்ன இங்கே வெட்டிச் சோத்துக்கா கட்டிவச்சிருக்கு? மனுசன் ஆபீசுக்குப் போகணுமே எழுப்பணுங்ற அக்கரை வேண்டாம்?' என்று இரைந்தான். அவசர அவசரமாகக் குளிக்கும் அறைக்குப் போனான். அங்கே அவள் சோப்புடனும் துண்டுடனும் காத்திருந்தாள். அவளை எரித்துவிடுபவன்போல் பார்த்தான். வென்னீர் சூடுபார்த்துத் தண்ணீர் கலக்கப்போன அவள் கையிலிருந்து செம்பைப் பிடுங்கிச் சுடும் வென்னீரிலே அமுக்கினான். அடுத்த வினாடி கை சுடவே செம்பைக் கீழே போட்டுக் கையை உதறினான். கோபம் பொங்க அவளை நையப் புடைத்தான். அவள் இனித் தன் கண்ணிலேயே படக்கூடாது எனக் கட்டளையிட்டான்.

அன்று இரவு தூக்கம் கொள்ளாது உலவிக்கொண்டிருந்தவன் மாடியைவிட்டுக் கீழே இறங்கி வெளியேற எண்ணினான். படியிலே காலை வைத்தான். தாய்தந்தையர் பேச்சுக் கேட்டு நின்றான். அவர்கள் சிரித்துப்பேசி மகிழுவது போல் தானும் இருக்கமுடியாதபடி ஊமையைக் கட்டிவைத்துவிட்டனரே என்று நினைத்தபோது அழுகை பீறிட்டது. அவனுடைய நண்பர்கள் பலர் தங்கள் மனைவியருடன் காதல்மொழி பேசிக் கைகோர்த்து அலையும் காட்சிகள் அவன் உள்ளத்தை மேலும் புண்படுத்தின. திரும்பித் தன் அறையை நோக்கி

நடந்தவன் பெற்றோரின் பேச்சுத் தன்னைப் பற்றித் திரும்புவது கண்டு நின்றான்.

"என்ன இருந்தாலும் ஆறுமுகத்திற்கு நாம் தீங்குதான் செய்துவிட்டோம். அவன் எப்படி இருந்தவன் எப்படி மாறிவிட்டான். என்னால் சகிக்கவே முடியவில்லை."

"என்னடி பைத்தியக்காரி மாதிரிப் பேசுறே! அவன் நினைத்தால் எவ்வளவோ அனுபவிக்க லாம். வீட்டிலிருப்பது ஊமையானால் என்ன அவனோடு வீண் வாதம் செய்யமாட்டாள். தொல்லையில்லை. ஏதோ பணமிருக்கு பாங்காய் வாழ வழியை வகுத்துக்கொள்ளவேண்டியது தானே?"

"ரொம்ப நல்லாயிருக்கு நீங்க பேசறது. அவன் உங்க பிள்ளைன்னாலும் என் வயிற்றிலே பிறந்தவன். மத்ததுக அலஞ்சது மாதிரித் திரியமாட்டான்......நல்ல வழி சொல்லிக் கொடுக்கிறீங்களே, மகனுக்கு!"

"பேசாமே இருடி! அவளைக் கொஞ்சநாள் அவ அப்பன் வீட்டுக்கு அனுப்பிச்சு வைப் போம். பிரிஞ்சு கூடினால் மனம் மாறிடும்."

"அவரு 'அனுப்புங்க அனுப்புங்க'ன்னு கத்தைக் கத்தையாக் கடிதம் எழுதினபோது முடியாதுன்னுட்டு இப்ப நீங்களாகவே அனுப் பிச்சா என்ன நினைக்கமாட்டாரு."

"என்னடி நினைக்கிறது? நீ பேசாம இரு. எல்லாம் நான் கவனிச்சுக்கிறேன்."

மறுநாள் அவள் தந்தை வீடு சேர்க்கப்பட் டாள். அவள் ஊருக்குப் போகவேண்டும் என்று தன் தந்தை சொன்னபோது அவள் சைகையாலும் கண்ணீராலும் மறுத்துத் தன் தாயிடம் மன்றாடியதும் தன் ஆதரவுபெற ஆவலோடு நோக்கியதும் அவன் மனத்திரை யிலே தோன்றித் தோன்றிக் குத்தியது. இரண்டு மூன்று நாட்களாக இருப்பே கொள் ளவில்லை. குட்டிபோட்ட பூனைபோல் குறுக்கும் நெடுக்குமாக அலைந்துகொண்டே இருந்தான். மன நிம்மதிக்காகத் தனிமை நாடி பூஞ்சோலைக் குச் சென்றான். அங்கு அவன் துயர அலை அதிகப்படும்படி நண்பர்களின் பேச்சு அமைந் தது.

வீட்டை அடைந்து படுக்கையிலே சாய்ந்த வன் நெடுநாளாக எழுந்திருக்கமுடியவில்லை. நிமோனியா—டைபாய்டு இரண்டும் அவனை ஆட்கொண்டன.

* * *

ஊருக்கு வந்து சேர்ந்த தன் மகள் உணர்ச்சி யற்ற சிலையாக நடமாடியது சுப்பையாவை வாட்டியது. காரணத்தை அறிய அவர் முயன்றதெல்லாம் பயனற்றுப்போயின. கண வனைப் பிரிந்த ஏக்கம் என எண்ணினார். அவர் பாவம் தன் மகள் எல்லோரையும்போல் நல் வாழ்வு—இல்லற வாழ்வு—நடத்துவதாகவே எண்ணினார். அவர் நம்பிக்கையை நாசமாக்க அவள் விரும்பவில்லை. என்ன இருந்தாலும் எவ்வளவு நாள்தான் பெற்ற மனம் மகளின் சோக நிலையைத் தாங்கும். மறுபடியும் அவ ளைக் கணவன் வீடு சேர்ப்பதே முறை என எண்ணி மகளுடன் பயணமானார்.

* * *

ஆவலோடு கணவன் வீடு வந்தவள் தன் கணவனை நோயாளியாகப் படுத்த படுக்கை யிலே பார்த்ததும் கதறிவிட்டாள். ஆறுமுகம் அலட்சியமாகத் திரும்பிக்கொண்டான். அவன் கருத்தில், தான் இன்னும் என் சாகா மலிருக்கிறேன் என்பதற்காக அவள் அழுவ தாகப் பட்டது. என்றபோதிலும் முன்போல் அவளை வெறுத்துப்பேச முடியாதபடி ஏதோ ஒரு உணர்வு அவன் உள்ளத்தே எழவே செய்தது.

அன்றிலிருந்து நாள்தோறும் கண்விழித் துக கணவனுக்குப் பணிவிடை செய்தாள் அவள். நோக்கமறிந்து காரியங்கள் செய்தாள். அவன் எதிர்பாராத அளவுக்குக் கொஞ்சமும் அருவருப்புக் கொள்ளாது அவன் துப்பும் எச்சிலை அப்புறப்படுத்தியும், உடைகளை மாற் றியும், உடம்பைத் துடைத்தும் சுத்தமாக வைத்தாள். எனினும் அவன் பூரணமாக அவளை—அவள் பணிவிடையை ஏற்கவில்லை!

தினமும் கண்விழித்த காரணத்தால் ஒரு நாள் அவள் இரவு சற்றுக் கண்ணயர்ந்து விட்டாள். இருமலில் கஷ்டப்பட்ட ஆறுமுகம் துப்புக் கோப்பையை எடுத்துத்தராது தூங்கு கிறாளே என்ற கோபத்தில் பக்கத்திலிருந்த மருந்து பாட்டிலைத் தூக்கி அவளை நோக்கி எறிந்தான். அவள் மண்டையைத் தாக்கி அது நொறுங்கியது. அலறி எழுந்தவள் என்ன எண்ணினாளோ சட்டென மௌனமாகி தலையிலிருந்து வடிந்த இரத்தத்தைத் துணி யால் தடுத்துக்கொண்டே சிதறிய கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கி எடுத்துவிட்டு விரைந்துவந்து அவனைக் கவனித்தாள். ஆறுமுகம் இதை எதிர்பார்க்கவில்லை. ஏதோ ஒன்று அவன் உள்ளத்தைத் தாக்கியது. கண்ணீர் 'பொலபொல'வெனப் பெருக்

ஞாபகசக்தி

'ஞாபக மறதி' என்பது உலக மக்களின் அன்றாட வாழ்வில் அடிக்கடி காணப்படுவதொன்று. 'ஏதோ மறதியாக வைத்துவிட்டேன், 'எங்கே வைத்தேன் என்று ஞாபகம் இல்லையே' என்று பலவாறு கூறுகிறோமே ஒழிய, மறதி ஏற்பட்டதின் காரணம் என்ன? எப்பொழுதும், எல்லாவற்றையும் எல்லோரும் மறந்துவிடுகிறோமா என்று நாம் ஆராய்ந்து பார்ப்பதில்லை. நாள் தவறினாலும் காலட்சேபம் செய்வது தவறுவதில்லை நம் நாட்டில்! வேளை தவறினாலும் விரதம் தவறுவதில்லை! பூஜை, புனஸ்காரங்களுக்கோ குறைவேதுமில்லை! இந்த ஆராய்ச்சிக்கு நேரம் இல்லை இங்கு. இந்தவித ஆராய்ச்சியில் கவனம் செலுத்தும் ஒருசிலருக்கும், "பைத்தியக்கார மனுஷனய்யா, நீர்! பகவான் சிருஷ்டி விநோதங்களில் இதுவும் ஒன்றுவோய்! இதற்கெல்லாம் ஏன், எப்படின்னு தோண்டித் துருவிக் கேட்டுண்டு இருந்தா எப்படி ஓய்?" என்ற கேலியும் கிண்டலும் கலந்த பேச்சுதான் கிடைக்கிறது'

மேனாடுகளில், குறிப்பாக அமெரிக்காவில் மனிதனின் குணக்கூறுபாடுகள் பற்றிய ஆராய்ச்சி அடிக்கடி நடத்தப்பட்டு வருகின்றன. அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் செய்த ஆராய்ச்சியின் முடிவாக, 'ஞாபகசக்தி' யுத்த காலத்திற்கு முன்பு இருந்ததைவிட தற்சமயம் மக்களிடம் பொதுவாக அதிகமாக இருக்கிறது என்றும் 'ஞாபகசக்தி' முன்பு இருந்ததைவிட தற்பொழுது அதிகம், வருங்காலத்தில் இன்னும் அதிகமாகலாம் என்றும் கருதுகிறார். 'ஞாபகசக்தி' முன்பு இருந்ததைவிட இப்பொழுது அதிகமாகிவருகிறது ஏன் என்பதற்கான காரணங்கள் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

நமக்கு ஞாபகமூட்டுவது எது, எப்படி, என்பதுபற்றி நாம் நினைத்துப் பார்த்ததில்லை. நாம் ஏதாவது ஒரு பொருளைப் பார்க்கும் பொழுதோ, அல்லது ஒரு பொருளைக் கேட்கும் பொழுதோ, அந்தச் செய்தி 600,000,000 நுண்ணிய நரம்பு அறைகளின் மூலமும், கணக்கிலடங்கா நரம்புத்தசைச் சேர்க்கையின் மூலமும் நமது மூளைக்கு அனுப்பப்படுகிறது. செய்தி ஆழ்ந்ததாகவோ அல்லது அடிக்கடி திரும்பிக் கூறப்படுவதாகவோ இருந்தால் நரம்பு அறைகள் அவற்றை எளிதில் அறிந்து கொள்ளும். இதைத்தான் 'நினைவு', 'ஞாபகம்' என அழைக்கிறோம். இந்த நினைவுத்திறன் அதிகமாக இருப்பதற்குப் பொருள்களை கவனத்துடன் கற்கவோ, கேட்கவோ வேண்டுவது இன்றியமையாதது. இம்மாதிரி நினைவுத்திறன் அதிகம் கொண்டோர் சிலரையும், அவர்கள் அதைப்பெற்ற வழியையும் தெரிந்துகொள்வதின்மூலம் நம் நினைவுத்

கெடுத்தது. அவள் அவன் கண்களைத் துடைத்தாள். தனக்கு காயம் எதுவும் ஏற்படாததைப் போல் முறுவலித்தாள். அது அவன் உள்ளத்தை இன்னும் கசக்கிப்பிழிந்தது. அவன் கைகள் இரண்டும் அவள் கழுத்தைச் சுற்றின. "கண்ணே!" என்ற சொல் அழுகையினூடே வெளிப்பட்டது,

ஏதோ விழுந்த சத்தங் கேட்டு, எழுந்து வந்தனர் ஆறுமுகத்தின் பெற்றோர். அவள் தலைக்காயத்தைக் கண்டதும் பதறிப்போய் "என்ன?" என்று கேட்டனர் இருவரும். அவள் கூறினாள் சைகையால் தடுமாறி மருந்து பாட்டிலின்மேல் விழுந்துவிட்டதாக!

இந்தச் சம்பவம் ஆறுமுகம் உள்ளத்தில் அன்பை வளர்த்தது. தான் அவள் உள்ளத்தையும் பண்பையும் உணராது தவறான கண்ணோடு வெறுப்பை வளர்த்துக்கொண்டோம் என எண்ணினான். உள்ளக் கவலைகள் ஒழிந்தன. உள்ளம் உறுதிப்பட்டது. உடல் வலிவடைந்தது. நோய் மறைந்தது. அவர்கள் வாழ்விலே இனிமை புகுந்தது! எழில் நிறைந்தது. அவள் கண்களால் பேசினாள். கைகளால் பேணினாள் அவள் இபபோது அவனைப் பொறுத்தமட்டில் ஊமையல்ல உணர்ச்சியூட்டும் தமிழ்க் கவிதை!

திறனை அதிகப்படுத்தும் முறையைக் காண்பது எளிது.

லெச்லி வெல்ச் (Leslie Welch) என்பார் விளையாட்டு உலகைப்பற்றிய புள்ளி விபரங்களோ, வரலாறுகளோ கூறுவதில் நிபுணர். சிறு வயதில் இருந்தே இவர் விளையாட்டுக்களில் அக்கறைகொண்டு, கவனத்துடன், கற்றதால், அதுபற்றிய செய்திகள் அவர் மூளையில் ஆழ்ந்து படிந்தன. இன்றைக்கு, பிரிட்டனிலோ அல்லது உலகப் பந்தயங்கள் பற்றியோ கேட்கப்படும் எல்லாவித வினாக்களுக்கும் விடை இறுக்கும் ஆற்றலும், அறிவும், செய்திகளைத் தொகுத்து, தகுந்த புள்ளி விபரங்களுடனும், வரலாற்றுடனும் கூறும் நினைவுத்திறனைப் பெற்று வாழ்கிறார். எந்த ஆண்டில் நடந்த எந்த விளையாட்டு பற்றியும், புள்ளி விபரம் பற்றியும் கேட்டமாத்திரத்தில் துள்ளிதமாகக் கொடுக்க முடிகிறது. விளையாட்டுச் செய்திகள் பதிவுசெய்யப்பட்ட இயந்திரம்போல் அவரது மூளை இயங்குகிறது.

கிரிஸ்தியன் கேநெக்கர் (Christian Heinecker) என்ற சேர்மானியச் சிறுவன் பிறந்து ஐந்து ஆண்டுகள் முடியும் முன்பு 1725-ம் ஆண்டில் சூன் திங்கள் 27-ம் நாள் இறந்தான். உலகில் இச்சிறுவனைத் தோற்கடிக்கும் அளவு சிறு வயதில் அவ்வளவு நினைவுத்திறன் கொண்டவர்கள் இதுவரை இல்லை எனலாம். நான்கு வயது முடியும் முன்பே பூகோளம், வரலாறு இப்பகுதிகளில் கேட்கப்படும் எந்த வினாவிற்கும் விடையிறுக்கும் ஆற்றல் கொண்டிருந்தான். ஏறத்தாழ 'பைபிளி'ன் எல்லாப் பகுதியையும் தவறின்றி ஒப்புவிக்கும் ஆற்றலுடன், இலத்தீன், பிரெஞ்சு மொழிகளையும் தன் தாய் மொழியான சேர்மனிபோல் இலகுவாகவும், தங்கு தடையின்றிப் பேசும் அறிவையும் பெற்றிருந்தான் என்பதற்குச் சான்றுகள் பல உள. இச்சிறுவனின் புகழ் ஐரோப்பா முழுதும் பரவியது சுவீடன்நாட்டு மன்னன் இவனையழைத்து, ஆற்றலும் அறிவும் கண்டு பெரிதும் போற்றினான். இன்னும் கொஞ்சகாலம் உயிருடனிருந்திருந்தால், இதுவரை உலகு கண்டிராத ஒரு பெரிய அறிஞனாகவும், நிறைந்த நினைவுத்திறன் உடையவனாகவும் இருந்திருக்கக்கூடும். மிகவும் ஒல்லியாகவும், பலம் குன்றியும் இருந்ததால் வியத்தகு மூளையுடன் ஒத்துழைக்கும் சக்தி இழந்து இறந்தான்.

ரூபன்ஸ்டின் (Rubenstein) என்பவர் பியானோ வாத்தியத்தை வாசிப்பதில் நிபுணர். இவரது நினைவுத்திறனும், பாட்டுக்களைக் கவனப்படுத்தும் வழியும் மிகவும் உயர்ந்தவை. இவர் தம் நண்பர் ஒருவரிடம் ஒருசமயம்; "பாட்டு இயற்றுவதில் வல்லவர்களின் ஏடுகள் முழுதும் காணாமல் போய்விட்டாலும், அவற்றை அப்படியே பிழையின்றி எழுத என்னால் முடியும்" என்றார்.

இன்று நாம் கல்வி கற்று அறிவுடையோராகத் திகழ்வதற்குக் காரணமாய், கல்வி முறையை முதன்முதல் முறையாக இந்நாட்டில் வகுத்து இயங்கச்செய்த டி. பி. மெகாலே என்ற ஆங்கில அறிஞர் உயர்ந்த நினைவுத்திறன் உடையவர். இவர் மற்றொரு ஆங்கில அறிஞரும், கவிஞருமான மில்டன் என்பார் எழுதிய 'சுவர்க்கத்தின் இழப்பு' (Paradise Lost) 'சுவர்க்கத்தின் மீட்சி' (Paradise Regain) என்ற பெரும் கவிதைகளை, வரி பிறழாமல் ஒப்புவிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார்.

யுத்தத்திற்கு முன்பு பிரச்லா (Breslau) என்னும் நகரத்தில் விசித்திரமான விளம்பரம் ஒன்று வெளியாகியிருந்தது. புதிதாகத் திறக்கப்படவிருக்கும் செய்தி தெரிவிக்கும் அலுவலகத்திற்கு ஒரு ஆள் தேவை என்றும், அதிக நினைவுத்திறன் கொண்டவர்கள் தான் தேவை என்றும் அதில் கண்டிருந்தது. அதன்படி அந்த வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள் கெர் கெல்மட் ஓசிக் (Herr Helmut Ossig) என்பவர். மிகக் குறுகியகால அளவில் ஓசிக், பிரச்லாவின் தொலைபேசிவிவரத்திரட்டில் (Telephone Directory) உள்ள 60,000 பெயர்களையும் அவர்களுக்கு உரிய தொலைபேசி எண்ணுடன் நினைவில் வைத்து நினைத்த நேரத்தில் சொல்லும் ஆற்றலைப் பெற்றார். இது தவிர, 20,000 தேதிகளும் பிரச்லாவிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் கணக்கற்ற காலை, இரயில் போக்குவரத்துப் பாதைகளும், கால அட்டவணையில் உள்ளவைகளையும் துள்ளிதமாக நினைவில் வைத்திருந்தார். இதுபற்றியே இவருக்கு உயிருள்ள களஞ்சியம் (The Living Encyclopaedia) என்ற சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று.

காலஞ்சென்ற பீல்டு மார்சல் ஸ்மட்ச் (Field Marshal Smuts) ஆப்பிரிக்காவில் நிறவெறி கொண்டு கருப்பு இனத்தவரை இழித்தும் பழித்தும் நடந்தவர். அவருடைய சொந்த நூலகத்தில் 5,000 புத்தகங்கள் வரை வைத்திருந்தார். இப்புத்தகங்களில் வரும் வரிகளையோ அல்லது வாசகங்களையோ யாராவது கூறினால் அவை எந்தப் புத்தகத்தில் எந்தப்பக்கத்தில் இருக்கிறது எனத் தவறாமல்

கூறிவிடும் அளவிற்கு நினைவுத்திறன் படைத்திருந்தார்.

கான்யர்ச் ச்மித் (Conyers Smith) யார்க்ச்சைரில் வசிக்கும் முதியவர். அறுபது வயதுடையவர். இந்த வயதிலும் தேதிகளைக் கணக்காகக் கூறும் அளவிற்கு நினைவுத்திறன் கொண்டிருக்கிறார். ஒருமுறை அவர் கவனத்துக்கு வரும் தேதியை அவர் மறப்பதேயில்லை. உலகில் புகழ்பெற்ற மனிதர்கள் எவரின் பிறந்த தேதியைக் கேட்டாலும் உடனே துல்லிதமாகக் கூறுகிறார். தான் வசிக்கும் இடத்தைச் சுற்றிலும் உள்ள இடங்களில் வாழும் மக்கள் வைத்திருக்கும் கார் எண்களை எல்லாம் நன்றாக நினைவில் வைத்திருக்கிறார். ஒரு காரின் எண் அவசரமாகத் தேவைப்பட்டால், போலீஸ் ரிக்கார்டுகளைப் பார்த்துத் தேடுவதற்குள் ச்மித்தைக் கேட்டு அறிந்து கொள்வது உண்டு என்று கூறப்படுகிறது.

அமரர் என்று போற்றப்பட்ட மொசார்த் (Mozart) தின் நினைவுத்திறன் யாவரும் கண்டு வியக்கத்தக்கதொன்று. இவர் 1770-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11-ம் நாள், புனித வாரம் எனப் போற்றப்படும் வாரத்தில் ரோம நகருக்கு வந்தார். சிச்டைன் தேவாலயத்தில் (Sistine Chapel) அலிக்ரி (Allegri) என்பவரின் மிசிரிரி என்ற பாட்டைக் கேட்டார். இப்பாட்டை எழுதிக்கொண்டு செல்ல எவரும் அதிகாரிகளால் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் பாட்டை ஒருமுறை கேட்ட மொசார்த், வீட்டிற்கு வந்ததும் வரி பிறழாமல் அப்பாட்டை அப்படியே எழுதிவிட்டார். இரண்டு நாள் கழித்து தான் எழுதியதில் தவறு இருந்தால் திருத்திக்கொள்ளும் நோக்கத்துடன் அதைத் தொப்பியில் மறைத்து வைத்துக் கொண்டு தேவாலயத்திற்குச் சென்றார் ஆனால் தவறு ஏதுமின்றி ஒன்பது பாகங்கள் கொண்ட அந்தப் பாட்டைச் சிறிதும் மாற்றமல் அப்படியே எழுதியிருந்தார்.

இங்கிலாந்தின் மேற்குப் பாகத்தில் உள்ள ஒரு கிராமத்தில் ஒரு கிழவன் வசித்தான். நாற்பத்தைந்து ஆண்டுகளாக புதைக்கப்பட்ட மக்களின் பெயர், வயது, தேதி முதலியவற்றைக் குறிப்பாகக் கூறுவதுடன், ஒவ்வொரு புதையலின்போதும் துக்கத்துடன் உடன் வந்தவர்களின் பெயரைக்கூட நன்றாக நினைவில் வைத்திருந்தான்.

பெரும் புகழ்வாய்ந்த போதகர் டாக்டர் மோபாத் (Dr. Moffatt) ஆப்பிரிக்காவிலுள்ள நீக்ரோ இனத்தவர்களின் கூட்டம் ஒன்றில், ஒரு பெரும் உரையாற்றினார். அது முடிந்து திரும்பும்பொழுது ஒரு நீக்ரோச் சிறுவனைச் சுற்றிப் பெரும் கூட்டம் கூடியிருந்ததைக் கண்டார். கூட்டத்தில் நடப்பது என்ன என்று அறியும் நோக்கத்துடன் அங்குச் சென்றார். நீக்ரோச் சிறுவன் சற்றுமுன் தான் நிகழ்த்திய உரையை அப்படியே ஒப்பித்துக் கொண்டிருந்தான். வார்த்தைகளை வெள்ளைப் பாதிரிபோல் உச்சரித்ததுடன், அவர் பேசும் பொழுது கையாண்ட பாணியையும், பழக்கத்தையும் அப்படியே செய்தான்.

யுத்தத்திற்கு முன்பு அமெரிக்க உணவு விடுதி ஒன்றில் சாமான்கள் வைக்கும் அறைக் காவலனாக நீக்ரோ ஒருவன் வேலைபார்த்து வந்தான். விடுதிக்கு வருபவர்களின் முகத்தை ஒருமுறை பார்த்ததும் நன்றாக நினைவில் கொண்டு, அவர்கள் கேட்பதற்கு முன்பு அவரவர்களுடைய துணி, பெட்டி முதலியவற்றை எடுத்துக்கொடுப்பான். பெரும் விருந்துகள் நடக்கும்பொழுது ஒரேசமயத்தில் 300-க்கு அதிகமானவர்களின் பொருள்களை, அவரவர்கள் முகத்தைப் பார்த்தவுடன் சோதனை எதுவும் இன்றி சரியாக எடுத்துக் கொடுத்துவிடும் அளவுக்கு ஆற்றல் பெற்றிருந்தான். விடுதிக்கு உடையவர் நீக்ரோ காவலாளி ஒரு முறைகூடத் தவறியதில்லை எனக் கூறினாராம்.

நடிகை லில்லா மெக்கார்தி (Lillah McCarthy) பத்துவயதுச் சிறுமியாக இருந்தபொழுது மில்ட்டனின் "சுவர்க்க இழப்பு" என்ற நூலின் இரண்டாம் புத்தகத்தை மனப்பாடம்செய்தால் ஒரு பவுன் இனாம் தருவதாக அவளுடைய தந்தை கூறினார்; ஆசையும் ஆர்வமும் தூண்ட அதிசயிக்கத்தக்க முறையில் அதைப் பாடம் செய்தாள். அதன்பிறகு உலகப்புகழ் பெற்ற செகப்பிரியரின் "ரோமியோவும் சூலியத்தும்" என்ற நாடகத்தைப் பாடம் செய்தால் மற்றுமொரு பவுன் தருவதாகக் கூறினதின்பேரில் லில்லா தவறுகள் ஏதுமின்றி பாடம்செய்து ஒப்புவித்தாள்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில், இலண்டன் காலைப் பத்திரிக்கை ஒன்றில் ஆசிரியராக உட்பால் (Woodfall) என்பவர் பணியாற்றினார். அந்தக்காலத்தில் பாராளுமன்றத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பத்திரிக்கையில் வெளியிடுவதுபற்றி முடிவு செய்யப்படாமல் இருந்தது. பாராளுமன்றத்தில் நிகழ்ச்சிகளின் குறிப்பு எடுக்க யாரையும் அனுமதிப்பதில்லை. உட்பால் பாராளுமன்றத்திலிருந்து திரும்பியதும் அன்று நடந்த இருப்துக்குமேற்பட்ட அங்கத்தினர்களின் பேச்சை அப்படியே நினைவுபடுத்தி பத்திரிக்கையில்

எழுதிவந்தார். இதையொட்டி இவருக்கு 'நினைவுத்திறனர்' என்ற பொருள்படும் "Memory" உட்பால் எனப் பெயர் வழங்கப் பட்டது.

பலவித எண்களை நினைவுபடுத்திச் சொல்ல முடியுமா உங்களால்? 'எண்' என்ருல் உங்களுக்கு நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் இவர்களின் தொலைபேசி அல்லது கார் எண் அல்ல. வேறு முக்கியத்துவம் எதுவும் இல்லாத சில எண்களை உங்களால் நினைவில் இருத்திப், பிறகு மறவாமல் கூறமுடியுமா? எங்கே, உங்களால் முடிந்தால் கீழே குறிப்பிட்டவைகளை முயன்று பாருங்கள்!

883, 726, 941, 738, 992, 437, 675.—இந்த எண்களைப் பாடம் செய்யுங்கள். பிறகு வரிசையாகவும், பின்புறமிருந்து முன்புறமாகவும் தவறு ஏதுமின்றிக் கூறுங்கள். இவற்றைத் தவறின்றிச் செய்வது சுலபமாக இருந்தால், எண்களைப் பொறுத்தவரையில் உங்கள் நினைவுத்திறன் நன்ருக இருக்கிறது என்று பொருள்.



பார்லிமெண்டுக்கு அ—தொகுதியிலிருந்து வந்த பிரதிநிதி ஒவ்வொரு நாளும் தவருமல் வருவார், சபைக் கலையும் வரையில் தன்னிடத்தில் உட்கார்ந்திருப்பார், ஆனல் பேச்சுகள் எதிலும் கலந்துகொள்வதில்லை. சபைத்தலைவருக்கு அது ஆச்சரியத்தை அளித்தது.

ஒருநாள் பார்லிமெண்டில் நிதி மசோதா ஒன்றின் பேரில் பலத்த விவாதம் நடைபெற்றது. மந்திரிசபைக் கட்சியினர், எதிர்க்கட்சியினர் ஒவ்வொருவரும் பேசத் துடித்தனர். ஒருவர் பேசிவிட்டு உட்காரும்பொழுது இருபது முப்பது பிரதிநிதிகள் ஒரே சமயத்தில் எழுந்து நின்று பேச அனுமதி கோரினர்கள். யாரை அனுமதிப்பது என்பதில் சபைத் தலைவருக்குச் சங்கடம் வந்தது, ஒரு முறை நன்ருகச் சுற்றிப் பார்த்தார். அ— தொகுதி பிரதிநிதி எழுந்து நின்று இரண்டு கைகளையும் உயர்த்துவதைப் பார்த்தார்! சபைத்தலைவருக்கு மகிழ்ச்சி யுண்டாயிற்று, இதுவரை எப்பொழுதும் பேசவே முன்வராத பிரதிநிதி சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள முன்வந்ததைப்பற்றி.

"அ— தொகுதி பிரதிநிதி இப்பொழுது பேசுவார்!" என்று சபைத்தலைவர் மற்ற பிரதிநிதிகளை உட்கார வைத்தார்.

அ— தொகுதி பிரதிநிதி விழித்துப் பார்த்து "நான் பேசுவதற்காக எழுந்திருக்கவில்லை, சோம்பலை முறிக்க எழுந்தேன்!" என்று உட்கார்ந்தார்,

வள்ளுவர் கூறும் கல்வி

[குறளன்பன்]

வள்ளுவரின் பெருமையையும், அவரியற்றிய நூலின் தன்மையையும் உலகம் நன்கறியும். காரணம் அவர் உலக கவி; உலக கவிகளுள்ளும் தலைசிறந்த - உண்மை வாழ்விற்கு வழி காட்டிய ஒப்பற்ற கவியென்பதால்.

உண்மை வாழ்வு பெற எண்ணும் மக்கட்கு அறம், பொருள், இன்பம் எனும் மூன்று உறுதிப் பொருள்களும் அவசியமாதலால், வள்ளுவர் தாம் செய்த நூலில் இம்முப் பொருட்களையே, நடுவு நிலை பிறழாது, அனைத்துலகத்திற்கும்—முக்காலத்திற்கும் பொருந்தி பயனுறும்படி கூறிச்சென்றார்.

அறம், பொருள், இன்பம் எனும் மூன்றனுள் அறவழி நிற்றற்கும், இன்பம் பெறுதற்கும் நடுவிலுள்ள பொருளே முக்கியமென்று உணர்த்தும்பொருட்டு அதனை ஏனை இரண்டிற்கும் இடையில் வைத்தார். வாழ்விற்குப் பொன், மணி முதலிய பொருட் செல்வமன்றி கல்வி, ஒழுக்கம், அன்பு, முயற்சி முதலியவைகளும் தேவையாதலால் அவற்றையும் பொருளென்றே பகுத்துப் பொருட்பாலுள் கூறினார். இப்பொருளெல்லாம் பெற்று உரிமையுடன் வாழ்வதற்குத் துணைசெய்வது அரசுமுறையாகலின் அப்பாலுள் அரசியலையே முதற்கண் கூறினார். அரசும், நாடும் தத்தம் கடமைகளாற்றி உண்மை நெறியில் செல்ல 'கல்வி'யே முக்கியமாதலால், முதலில் அரசின் பெருமையைக் கூறியவர், அடுத்த அதிகாரத்தில் இக் கல்வியைப் பற்றிக் கூறி, இதன் பின்புதான் இக்கல்வியாற் பெறப்படும் ஒழுக்கம் முதலிய பண்புகளைக் கூறினார்.

இதுவரை, வள்ளுவர் அதிகாரம் வகுக்கும் போதுகூட கல்விக்கு எவ்வாறு பெருமையளித்தாரென்று கண்டோம். மக்கள் இன்ப வாழ்வு பெறக் கல்வி தேவைதான். கல்வியென்றால் எத்தகைய கல்வி வேண்டும்? குற்றமற்ற கல்வி வேண்டும்; கற்பது சிறிதாயினும் கற்றபடி வாழ்ந்து காட்டுவதற்கேற்ற கல்வி—இன்பவாழ்விற்கு வழிகாட்டும் கல்வி வேண்டும்; அரசனது செங்கோல் கெடாதிருக்க அறநூல், நீதிநூல், யானை—குதிரை—தேர்—படைக்கலமென்றிவற்றின் நூற்கல்வி தேவையாயிருத்தல்போல, மக்களின் வாழ்வு கோணுதிருக்க அறநூல், ஒழுக்கநூல், பொறியியல் நூல், வானநூல் போன்ற வாழ்வியல் நூல்களின் கல்வி வேண்டும்.

இவைகட்கு மாறாக, மக்கள் வாழ்விற்குத் தேவையற்ற கல்வி—தீமைபயக்கும் கல்வி—குற்றம் நிறைந்த கல்வி குறுக்கிடுமாயின் அதனை யொதுக்கித்தள்ளவேண்டும். எத்துணை இடையூறுகள் நேரினும் தாங்கி, எதிர்த்து, வென்று வாழ்க்கை முறையை விளக்கி வழிகாட்டும் கல்வியையே பயில வேண்டும்—பரப்பவேண்டும். இக்கருத்துக்களை உள்ளடக்கியே,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்னும் குறளை இயற்றினார் வள்ளுவர். இக் கல்வியின் இன்றியமையாமையை மேலும் வலியுறுத்த எண்ணியவர்,

"எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்று கூறினார்.

இக்கூற்றில்தான் எவ்வளவு கருத்தாழம் மிக்குள்ளது? உலகில் தோன்றிய பொருள்களையெல்லாம் உண்மையில் காண்பதும், கண்டு அறிவிற்கு உணர்த்துவதும் கண்களன்றோ? இவைகளைக் கண்களல்லவென்று கூறினார் வள்ளுவர். ஏன்? கண்களால் புறத்தோற்றத்தைத்தான் காணமுடியுமேயன்றி, காணப்படும் பொருளின் தன்மையை வேறு எவ்விதத் துணையுமின்றி பகுத்தறிய முடியுமோ? அறிவின் துணையின்றி பொருளின் தன்மையை அவைகளால் பகுத்தறியமுடியாது; எனவே உயிர்க்கும்—உடலுக்கும் அவைகளால் இன்பமுந் தேடித்தரமுடியாது. இந்நிலையிலுள்ள கண்கள் எவ்வாறு உண்மையில் கண்களாகும்?

ஆனால் கல்வியோ அவ்வாறன்று. புறத்தே காணப்படும் பொருள்களின் தன்மையையும்,

அவற்றால் பெறப்படும் நன்மை தீமைகளையும் பகுத்தறிய அறிவிற்குத் துணைபுரிந்து நல் வாழ்க்கைக்கு வழிகாட்டியாயுள்ளது. எனவே தான் கல்வியே கண்ணென்று கூறினார் வள்ளுவர். இதனை யார் மறுத்தல் கூடும்?

கற்றவரே கண்ணுடையரேன்றால் கல்லாதவர்......? இதையும் அடுத்தே கூறியுள்ளார், "கல்லாதவர் முகத்திரண்டு புண்ணுடை யாரெ"ன்று. "கல்வியறிவில்லாதவர் கட்கு கண்கள் கண்களல்ல; அவை உண்மையில் புண்களே" என்பது வள்ளுவர் கருத்தாகும். எப்படி? கல்வியறிவு அற்றவனின் கண்களுக்கு அக்கல்வியறிவின் துணை கிடையாது. எனவே, முன்பு விளக்கியதுபோல் அவைகட்கு நல்லவையென்றும், அல்லவையென்றும் தனித்தனியே பகுத்துணரும் ஆற்றல் கிடையாது. ஆகையால் இக்கண்களால், எதிர்வரும் துன்பங்களைத் தடுக்கும் ஆற்றலிழந்து உடலும்—உயிரும் துயருறுகின்றன. துயரென்றால் சாதாரணத் துயரல்ல, புண்களால் எவ்வளவு பொறுக்கவியலாத் துயரை உடலும்—உயிரும் அடைகின்றனவோ, அவ்வளவு துயரை இக்கண்களால் அடைகின்றன. எனவேதான் கல்லாதவரின் கண்கள் கண்களல்ல என்று கூறுவதோடு மட்டுமில்லாது, அவை முகத்தில் காணப்படும் இரு புண்களென்றும் கூறினார் குறளார். இக்கருத்தை உள்ளடக்கியே,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்னும் குறள் விளக்குவதாயுள்ளது.

கற்றவர்கள் தாமுண்டு தம் வாழ்வுண்டு எனும் தன்னலப் போக்கிலே செல்லுவதும், தம்முடன் வாழும் மக்களின் துன்பங்களைக் களையும் ஆற்றலும், திறமையும் தாம் பெற்றிருந்தும் அவ்வாறு செய்யும் எண்ணமே கொள்ளாதிருப்பதும் இன்று பெரும்பாலும் காணும் நிகழ்ச்சிகளாகும். இவர்கள் தம் கடமைகளையுணரவும், தாம் செல்லும் தவறான போக்கிலிருந்து மீளவும் அறிவுறுத்த எண்ணிய முதற் பாவலர்,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்று கூறினார்.

"கற்றோர், தாம் கற்ற கல்வியால் பிறரும் பயன்பெறச் செய்தல்வேண்டும்; நல்லவைகளை எடுத்துக்காட்டி அல்லவைகளை விலக்குதல் வேண்டும்; எங்கும் அன்பு, ஒழுக்கம், உண்மை முதலிய பண்புகளே ஆட்சிபுரியும்படிச் செய்தல் வேண்டும்; இவ்வொப்பற்ற பணிகள் புரியும்போது ஏனைய கற்றோரும்—கல்லாதவரும் மகிழும் வண்ணம் அவர்களுடன் கூடி, பிரிவு நேர்ந்துழி, 'இவர்களை மீண்டும் என்று காண்போம்? அறிவுரைகளையும் தொண்டையும் மீண்டும் என்று பெறுவோம்?' என்று ஏங்கும்வண்ணம் தொண்டாற்றவேண்டும்"—என்பனபோன்ற கருத்துக்களை இச்சிறு குறள்மூலம் வள்ளுவப் பெருந்தகை வழங்கியிருத்தலைக் காணலாம்.

கற்றவர்களில் சிலர் தாம் ஒழுகவேண்டிய நெறியில் நின்றொழுகுவதில்லை. காரணம் இவர்கள் பயன்தரும் நூல்களைப் பயிலாது, பயனற்ற—கற்கத்தகாத நூல்களைப் பயின்றனர்போலும். அல்லது கற்கத்தகும் நூல்களாயினும் பயனுள்ள வழியிலே பயிலாதொழிந்தனர்போலும், எனவேதான், அறியாமையின் காரணமாக, "கற்கவேண்டியவைகளனைத்தையும், கற்றுவிட்டோம்; முழு அறிவும் கைவரப்பெற்றுவிட்டோம்; இனி பயில வேண்டுவது ஒன்றுமில்லை" என்று தருக்கித் திரிகின்றனர். இவர்களின் மயக்கத்தைத் தெளிவிக்க எண்ணியே வள்ளுவர் கூறினார்: "மாந்தர்களே! மணற்கேணியிருக்கின்றது. தோண்டியவுடன் மண்ணில் புதையுண்டிருக்கும் நீரனைத்துமா வெளிவருகின்றது? இல்லையே. தோண்டத் தோண்ட நீர் சுரந்து கொண்டுதானேயுள்ளது? அதைப்போல் கல்வியெனும் மணலூற்றினைத் தோண்டத் தோண்டதான் அறிவென்னும் நீர் குறைபாது சுரந்துகொண்டேயிருக்கும், எவ்வாறு கேணியைத் தோண்டத்தோண்ட முழுநீரும் கைவரப் பெறுவதில்லையோ, அவ்வாறே கல்வியைப் பலகாலம் பயின்றுகொண்டேயிருப்பினும் அறிவு வளர்ந்துகொண்டேயிருக்குமேயன்றி முழு அறிவும் எவரும் என்றும் கைவரப் பெறுவதேயில்லை" அக்குறள்,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்பதுதான்.

கல்வியின் பெருமையை யுணர்ந்து பலப்பட ஓதிய வள்ளுவனாருக்கு, எவ்வளவு எடுத்துக் கூறியும் கல்லாமலே—கல்வியின் பயனைப் பெற எண்ணாமலே காலங்கடத்தும் மக்களிடத்து உண்மையாகவே இரக்கம் தோன்றுகின்றது. தன்னுள்ளத்தையே கேட்டுக்கொள்கின்றார்: "நெஞ்சே கற்றவர்க்கு அவர்கள்

நாடுமட்டுமன்றி உலக நாடுகளும் உவந்து பொருளும், புகழும் தேடித்தருகின்றனவே. அவர்கள் கற்ற கல்வி இப்பிறப்பில் மட்டுமல்ல எழுபிறப்பிலும் சென்று உதவுவதாயுள்ளதே. அரசர், வலியர், கள்ளர் முதலியோரால் அழிவும், பிறர்க்குக் கொடுத்தலால் குறைவும் பெறும் மணி, பொன் முதலிய செல்வங்களைப்போலன்றி, அழிவற்றதாய், கொடுக்கக்கொடுக்கக் குறைவற்றதாய் உள்ளதும் கல்விதானே. இவ்வளவு பெருமையும் பயனுமிக்கக் கல்வியை, தானும் உணராது, எடுத்துக்காட்டியும்—இடித்துக்கூறியும் ஏற்காது ஒருவன் தான் சாகும்வரையும் பயிலாதிருக்கின்றனே, ஏதனல்?'' இக்கருத்தை விளக்கும் குறட்பாக்கள்,

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

ஆகியவைகளாகும்.

கல்வியைப் பற்றி இவ்வளவு கூறிய வள்ளுவர் அதனைப் பயிலத்தக்கவர் யார்? தகாதவர் யார்? என்றும் கூறினரா என்று பலருக்கு வினவத்தோன்றும். இதற்குரிய பதிலை அவர் சற்றுக் கடுமையாகவே—ஆனல் கூறவேண்டிய முறையிலே கூறினர். இதற்குரிய பதிலை மாத்திரம் கூருது இதனேடியைபுடைய வேறு சில செய்திகளையும் ஒருங்கே கூறினர். உலகை அலக்கழித்து வரும் முக்கிய பிரச்சினைகள் பற்றிய கருத்தை — சீர்திருத்தக்காரர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் ஜனநாயக, சமதர்மவாதிகளும் எண்ணிப் பார்த்திடமுடியாத உயர்ந்த கருத்துக்களை வள்ளுவர் கூறினர்.

"உலகில் சாதிகள் இரண்டு. அவை பிறப்பினலோ அல்லது பொருளாதாரம்போன்ற பிரச்சினைகளாலோ உண்டானவையல்ல; கல்வியால் உண்டானவை. அச்சாதிகளே கற்ற சாதியென்றும், கல்லாத சாதியென்றும் அழைக்கப்படும். கற்றவர்கள் மேல்சாதியையும், கல்லாதவர்கள் கீழ்சாதியையும் சார்ந்தவர்கள். ஆண்-பெண்களும், அரசர்—ஆண்டிகளுமட்டுமல்ல; மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் கற்றவராயின் மேல்சாதியினராவர். மாருக, கல்லாதவர்கள் எந்நிலையினராயினும் கீழ்சாதியைச் சார்ந்தவர்களே, கீழ்சாதி மட்டுமல்ல தோற்றத்தால் மக்கள் வடிவினராயினும் உண்மையில் விலங்கினத்தவரே''—என்பதே வள்ளுவர்தம் பொன்மொழிகளாகும். இப்பொன்மொழிகளையே கீழ்க்காணும் குறள் மணிகள் தாங்கி ஒளிவீசுகின்றன:

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு.

விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

இதுவரை கல்வியின் பெருமை, தன்மை, அதன் அவசியம், அதனைக் கற்கவேண்டிய முறை ஆகியவற்றை வள்ளுவனர் எவ்வளவு அழகாக ஈரடிக் குறள் வெண்பாவிலே கூறிச்சென்றுர் என்று கண்டோம். வள்ளுவர் இக்கருத்துக்களை இன்று நேற்றல்ல ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே கூறினர். தாம் பிறந்த தமிழ்ச் சமுதாயம் செல்லவேண்டிய நெறிகளினின்றும் பிறழ்ந்து செல்வதைக் கண்டு, உளம் நொந்து, அன்றே எச்சரிக்கை செய்யும்முகத்தான் இக்கருத்துக்களைக் கூறினர். அவர் அன்று விடுத்த எச்சரிக்கையை இன்ருவது, ஆதிக்கக்காரர்களின் பிடியிலே சிக்கி, தாழ்நிலையுற்றுத் தவிக்கும் தமிழரனைவரும் கருத்தில் கொள்ளவேண்டும். வாழ்க்கைக்குச் சிறிதும் ஒவ்வாததாய், நன்மை பயக்காவிடினும், மக்களிடையே மறைந்துவரும் சாதி, மத பேதங்களை வளரச்செய்யும் முறையிலே இன்றைய ஆட்சியாளர் வலிந்து புகுத்த முயலும் இழிந்த கல்வி முறையை தகர்த்தெறிய அனைவரும் ஒன்றுபட்டெழுதல் வேண்டும். இதுவே வள்ளுவர் காட்டும் வழியிலே நடக்க விரும்பும்—நடந்துவரும் அனைவரும் உடனடியாகச் செய்துதீரவேண்டிய பணியாகும்.



தொடர்கதை

பனிவெளியிலே

[இரா. செழியன்]

(1 - 1 56 இதழ்த் தொடர்ச்சி)

காலை நான்குமணி. மையிருட்டுக் கலையவில்லை. தெருவிளக்கு வெளிச்சத்தில் பனி மூடியிருப்பது தெரிந்தது. மடத்தின் பின்புறக் கதவு திறந்து, நித்தியானந்தசாமி மெதுவாக வெளிவந்தார். ஆனால் முன்போலக் காவியுடையோ, கமண்டலமோ இல்லை. வெள்ளையுடையில் அவர் இருந்தார். தாடி எடுக்கப்பட்டு, முகம் மாறுதலடைந்திருந்தது. கதவை மெதுவாகத் திறந்ததும், சுற்றிலும் பார்த்தார். யாரும் அவர் கண்களுக்குத் தென்படவில்லை. இரவு முழுவதும விழித்திருந்ததால் அவர் கண்கள் மயங்கிய நிலையில் இருந்தன. எல்லாவற்றையும் ஏற்பாட்டுடனே அவர் செய்திருந்தார். கமலநாதன் வீட்டை விட்டு வந்ததும், அவர் மடத்துக்குள் நேராகப் போகவில்லை. எதிர்த் தோட்டத்தினுள் மறைந்து, மடத்துக்கு வந்து போகிறவர்களைக் கவனித்துக்கொண்டிருந்தார். அவருடைய கலக்கம், போலிசார் அவரைத் தேடிவரலாமென்பது. நடுநிசிவரை யாரும் வராது போகவே, மறைந்திருந்த இடத்தை விட்டுக் கிளம்பி, மடத்துக்குள் சென்றார். முதலில் காவியுடைகளை மாற்றி, தன் தாடியையழித்து, உருத்தெரியாதபடி மாற்றிக்கொண்டார். பின் தன்னிடமிருந்த முக்கியமான பொருள்களை மூட்டைகட்டி, பின்புறமாக வெளிவந்தார். காலை மலர்வதற்குமுன், நகரின் எல்லையைக் கடந்துவிட்டால். பின் தப்பித்து விடலாமென்பது அவரது திட்டம்.

தோட்டத்துக் கதவைத் தள்ளி, சாமியார் வெளிவந்தார். காரொன்று 'கிரிச்'சிட்டு வேகமாக வந்தது, அதன் வெளிச்சத்திலிருந்து மறைந்து நின்றார். கார் கடந்து சென்றது. சாமியார் இருட்டைவிட்டு அகன்று வெளிவந்தார். அவர் பின்புறமாக மற்றொரு உருவமும் வெளிவந்தது! சாமியார் திரும்பிப்பார்த்தா[ர்] துப்பாக்கியை நீட்டியபடி, கமலநாதன் நி[ன்]றான்!

"என்ன சாமியாரே! இரவோடிரவா[க] வெளியேற்றம்!"

"உஸ், போய்விடு!"

"பரிபூரணனந்த சோதியை எப்பொழுது[ம்] தேடுபவர், இப்பொழுது இருட்டில் நடமா[டு]கிறீர்களே என்று பார்த்தேன்! வேடங்கூ[ட] மாறிவிட்டதே!

"உன்னுடைய இருநூறு ரூபாயைத் திரு[ம்]பித் தந்துவிடுகிறேன். என்னைப் போகவிடு!"

"பேரமா? போலிச்சாமியே! நீ செய்[த] அக்கிரமங்களின் பலனைத் திருப்பித்தரவே நான் வந்திருக்கிறேன்! இந்த இடத்தைவிட்[டு] நீ அசையமுடியாது."

"என்னை விட்டுவிடு, நான் இனிமேல் உ[ன்] முன் வரமாட்டேன்! யாருக்கும் ஒன்றும் செ[ய்]யமாட்டேன்!"

"யாருக்கும் எதுவும் செய்யவும் உன்[னால்] இனி முடியாது! நீ விரும்பினாலும், விரும்ப[ா]விட்டாலும், எதுவும் செய்யமுடியாத நிலைக்[கு] —இடத்துக்கு உன்னை நான் அனுப்பிவி[டு]கிறேன்!"

"என்னிடமிருக்கும் பணத்தை—ரூபாய் ஐநூறுக்குமேலிருக்கும். அதை—அப்படியேத் தருகிறேன்! ஏன் வீண் சண்டை?"

"மறுபடியும் பேரம்பேச ஆரம்பித்துவிட்டாயா? இவ்வளவு நாள் காவியுடை, கமண்டலம் இவைகளைத் தாங்கி, பக்தியுடன் பேரம் பேசிக்கொண்டிருந்தாய்; இப்பொழுது கள்ள வேடத்தில் காசை வைத்துப் பேரம் பே[சு]

வைத்து? என்னுடையதை! உன்னைப்போலப் பணத்திற்காக நான் இங்கு வரவில்லை! உன்னால் ஏற்பட்ட அக்கிரமங்களுக்கு முடிவு காண—உன்னுடைய காமாந்த செயலுக்கு ஆளாகி வேதனைப்பட்டாளே ஒருத்தி, அவ ளின் சார்பாக நான் வந்திருக்கிறேன்! 'உலகம் மாயம், பெண் அதில் ஒரு மாயப்பிசாசு' என்ற உன் போலிவேதாந்தத்தை நம்பி, நான் உதறித்தள்ளிய ஒரு வாழ்வின் சார்பாக நான் வந்திருக்கிறேன்! உலகம் மாயம் என்பது உன்னளவில் சரியாகத்தான் இருக்கிறது! முன்பு முருகதாசர் அதற்குப்பின் நித்தியானந்தசாமிகள், நேற்று மாலை கட்டாரியை வீசி, பணம்பறித்திடும் கள்ளன்! எவ்வளவு மாயம், மாறுதல்! வா, போலிஸ்நிலையத்திற்கு! உனக்கு இன்னும் எவ்வளவு பெயர்கள் இருக்கின்றனவென்று அங்கு பார்க்கலாம்!''

சாமியார் விழித்தார், துள்ளிக்குதித்துத் "திருடன்! திருடன்!'' என்று கூச்சலிட்டு, கமலநாதன் கையிலிருந்த துப்பாக்கியைத் தட்டிவிடப் பார்த்தார். ஆனால் துப்பாக்கிக் கையில் பலமாகப் பிடிக்கப்பட்டிருந்ததால் விழவில்லை. ஆனால் தட்டிவிட்ட வேகத்தில் வளைந்திருந்த விரல்கள் அழுந்தின, வெடித்தது! சாமியார் "ஐயோ!'' என்று கீழே சாய்ந்தார். இரத்தம் பீரிட்டு வெள்ளையுடையை, காவிநிறமாக்கியது!

கூக்குரல் கேட்டு—துப்பாக்கி சத்தத்துடன்—எதிர்வரிசையிலிருந்த வீடுகள் சில திறந்தன. தோட்டத்திலிருப்பவர்கள், தெருவோரங்களில் அமைதியாகப் படுத்துறங்குபவர், அமைதி கலைந்து, கண்ணைக் கசக்கிக்கொண்டு வந்தனர். இரத்தவெள்ளத்தில் நித்தியானந்த சாமிகள் கிடந்தார். தாடியும் மீசையும் இல்லாத அவரை அடையாளங்கண்டுகொள்ள அவர்களுக்குச் சிறிதுநேரம் பிடித்தது. சுட்டவன் யாரென சிலர் இரண்டுபக்கத்தும் ஓடிப் பார்த்தனர். தூரத்தில் போய்க்கொண்டிருக்கும் காரின் பின்புற சிகப்பு விளக்கு அவர்களுக்குத் தெரிந்தது. அதுவும் தெருமுனையில் திரும்பியது, மறைந்துவிட்டது.

சாமியார் உடலில் உயிர் இன்னும் ஒடிக்கொண்டிருந்தது. அவரால் பேசமுடியவில்லை. உதடுகள் அசைந்தன, முணகல் சத்தம் வந்தது. கூடியிருந்தவர்கள் அவரைத் தூக்கிப் போய் மடத்தினுள் போட்டார்கள். போலிசும் டாக்டரும் வரும்வரை சாமியாரின் உயிர் காத்திருக்கவில்லை. தப்பிச் சென்றுவிட்டது.

சாமியார் பக்கத்திலிருந்த மூட்டையை அவிழ்த்தபொழுது, அதில் காவியுடைகள் பெரிய கத்தி, ருத்திராக்கமாலை, கமண்டலம், பணம், நூறுரூபாய் நோட்டுகள், மருந்துப் பொட்டலங்கள், விபூதிப்பை, அதனுள் அபின் எல்லாமிருந்தன. சாமியார் ஏன் சுடப்பட்டார் என்பதைவிட்டு, அவர் காவியையும் தாடியையும் துறந்து, இரவில் ஒரு மூட்டையுடன் ஏன் வெளிவந்தார் என்ற ஆராய்ச்சியில் கூடியிருந்தவர்கள் ஈடுபட்டார்கள்.

கமலநாதன் வீட்டில் குலசேகரன் முன்பக்கத்து அறையில் உலவியபடி இருந்தான். மூலையில் இருந்த சோபாவில், உட்கார்ந்தபடி சகுந்தலா உறங்கிவிட்டாள். நெடுநேரமாகியும் கமலநாதன் திரும்பவில்லை. ஏதேனும் ஆபத்து நேர்ந்ததோ என்ற கலக்கத்தில், குலசேகரன் காத்திருந்தான். நித்தியானந்த சாமிக்கும், அவனுக்கும் நடந்த சண்டைக்கப்புறம், கமலநாதன் எங்குபோனான் என்று சகுந்தலாவால் சொல்லமுடியவில்லை. தனக்குத் தெரிந்த ஒவ்வொரு இடத்துக்கும் குலசேகரன் போனசெய்து, கமலநாதனைப் பற்றிக் கேட்டபடி இருந்தான். ஆயினும் அவன் இருக்குமிடம் தெரியவில்லை. இரவு கழியப் போகிறது, இன்னும் வரவில்லையென்றதும், குலசேகரனுக்குக் கவலை அதிகமானது.

"கமலநாதன் வந்துவிட்டாரா?'' சகுந்தலா எழுந்து உட்கார்ந்தாள்.

குலசேகரன் கடைசியாகப் போலிசுக்குச் செய்தியனுப்புவதெனத் தீர்மானித்தான். போனை எடுத்துத் தனக்குத் தெரிந்த போலிஸ் அதிகாரியை அழைத்தான்.

"நேற்று இரவு வீட்டைவிட்டுக் கிளம்பிய கமலநாதன் இன்னும் திரும்பவில்லை!''

"இங்கு வரவில்லை! வெளியூர் போயிருப்பாரா?''

"போயிருக்கமுடியாது! எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை கவலையாயிருக்கிறது!''

"கவலையா? ஏன்?''

"நேற்று இரவு நித்தியானந்தசாமிகள் என் பவன் வீட்டுக்கு வந்தபொழுது இருவருக்கும் சண்டை மூண்டதாம்! கைகலப்பில், கமலநாதனைக் கத்தியால் காயப்படுத்திவிட்டு பணத்தை எடுத்துக்கொண்டு, அந்தப்போலிச்சாமி ஓடிவிட்டான்! பின்பு வீட்டைவிட்டுக் கிளம்பிய கமலநாதன் இன்னும் திரும்பவில்லை! காயம் பலமானதாக இருந்தால், எங்கேயாவது மயங்கி விழுந்திருக்கக்கூடும்.

அதிலும் காரில் அவர் போயிருக்கிருர்! என்ன செய்யலாம்?"

"கவலைப்படவேண்டாம். நான் தலைமை நிலையத்துக்குச் சொல்லி, மற்ற எல்லா இடங்களுக்கும் சொல்லுகிறேன்! ஆபத்து ஏதுவும் இருக்குமென்று நான் நினைக்கவில்லை."

"நான் இந்த இடத்தில்தான் இருப்பேன்!"

"கமலநாதன் வீட்டிலா?"

"ஆமாம்! ஏதாவது தெரிந்தால் நீங்கள் இங்கு போன்மூலம் செய்தி தரவும்!"

"சரி!"

காயம்பட்டதால் ஒருவேளை டாக்டர் வீட்டுக்குக் கமலநாதன் போயிருக்கக்கூடும் என்று குலசேகரன் டாக்டர்களைக் கூப்பிட்டுப் பார்த்தான். பலனில்லை! டாக்டர் சஞ்சீவி ஞாபகம் வந்தது! அவருக்கும் குலசேகரன் போன் செய்தான்! அவர் வீட்டில் இல்லை. குலசேகரன் ஆஸ்பத்திரியின் நம்பரைப் புரட்டினன். அங்கு டாக்டர் குணசீலன்—அவனுக்குத் தெரிந்தவன்தான், பதிலளித்தான். "டாக்டர் சஞ்சீவி இருக்கிருரா?"

"அவர் அறையில் இருக்கிருர். தூங்கப் போயிருக்கலாம். அவசரமாகக் கூப்பிடவேண்டுமா?"

"வேண்டாம்! கமலநாதன் அங்கு வந்தாரா?"

"இல்லை! ஏன் உடம்புக்கு ஏதாவது சரியில்லையா?"

"பிறகு சொல்லுகிறேன்! நீ தூங்கப்போகவில்லையா?"

"நாழியாகிவிட்டது. சாமியார் ஒருவர்—யாரோ நித்தியானந்த சாமியாராம்—துப்பாக்கிக்குண்டுகளுடன் அவர் பிணத்தைக் கொண்டுவந்து போட்டிருக்கிருர்கள், அதைப் பற்றிய முதல் குறிப்புத் தயாராகிறது......"

டாக்டர் குணசீலன் சொல்லி முடிக்கவில்லை. குலசேகரன் போனை வைத்துவிட்டான்.

"ஏன்? எங்கேயிருக்கிருராம்?" சகுந்தலா எழுந்து நின்ருள்.

"நித்தியானந்தசாமி துப்பாக்கியால் சுடப்பட்டு, இறந்துவிட்டாராம்?"

சகுந்தலா நிலைகுலைந்து உட்கார்ந்தாள். இருவரும் பேசவில்லை.

காலைக் கதிரவன் உயரே கிளம்பியும், வெளிச்சம் அதிகமாகவில்லை. மூடுபனி, அதிலும் அந்த மலையடிவாரத்தில், அடர்ந்து இருந்தது, மரங்கள், செடி, கொடிகள் பனியில் மறைந்து, ஒன்றுந்தெரியாமல் கிடந்தன. மலையின் உயர்ந்த வளைவுகள், தூரத்தில் விழுட நிழலைப்போல, காணப்பட்டது. குளிரும் பனியும், நிலப்பரப்பை மூடிக்கிடந்தன.

அடிவாரத்தடியில் பிரியும் பாதையில் செம்மறியாடுகள் அடர்ந்திருந்தன. அடர்ந்த மயிர்ப்போர்வையிருந்தும், குளிர் தாங்காமல் அவைகள் ஒன்ருேடொன்று நெருங்கி குவிந்திருந்தன. கார் வரும் சத்தம் கேட்டது. ஆடுகள் விலகாமல் படுத்திருந்தன. காரிலிருந்து மறுபடியும் சத்தம் வந்தது, பலமாக. ஆடுகள் அசைந்துகொடுத்து எழுந்தன. மரத்தடியில் இருந்த கிழவன்—பெரிய போர்வையால் தன்னை மூடிக்கொண்டு எழுந்தான். அவனுக்குச் சத்தம் கேட்டதேயொழிய, கார் நிற்குமிடம் தெரியவில்லை. அந்த அளவு பனி மூடிக்கிடந்தது. மெதுவாகப் பனியை விலக்கிக்கொண்டு, அவன் வந்தான்.

"ஆடுகளைச் சற்று விலக்கு!" காரிலிருந்து வேண்டுகோள் வந்தது. குரல் கமலநாதனுடையது.

கிழவன் குரல் வந்தபக்கம் இன்னும் வந்தான். கார் இருப்பது தெரிந்தது, காரின் மீது கைவைத்தான். பனிக்கட்டியைத் தொடுவதுபோல அது குளிர்ந்திருந்தது.

"இந்தப்பக்கம் எங்கே போகிறீர்கள்?" கிழவன் கேட்டான்.

"போகவேண்டும்!"

"இந்தப் பனியில் போனுல், பாதை தெரியாதே! அதிலும் சரிவான வழி, பகலில் போவதே ஆபத்து, அதிலும் இந்த பனியில் போவது கூடாது!"

"உனக்குக்கூடவா, பயமாயிருக்கிறது?" கமலநாதனுக்குச் சிறிது பேசலாம் என்றிருந்தது.

"உங்களிடம் சுருட்டு இருக்கிறதா?" இதைப்போன்று காரில் வருபவர்களிடம் கேட்டு, உயர்ந்த ரக சுருட்டுகளை அவன் புகைத்து ஆனந்தப்படுவது வழக்கம்.

"நான் சுருட்டுக் குடிப்பதில்லை."

கிழவன் தலையசைத்துக்கொண்டான்: "நான்கூட அந்த வழிதான் போகவேண்டும்.

ஆனால் இந்த மூடுபனியில் போனால், பாதை, இடறி ஆடுகள் விழுந்துவிடும். வெய்யல் கொஞ்சம் அதிகமானதும் கிளம்பினால், பனி விலகியிருக்கும் பின் வழி தெரியும்?''

கிழவன் மிக அமைதியுடன், தனது நீண்ட அனுபவத்தின் அடிப்படையில் சொன்னான். அந்தக் கிழவன் சொல்வது கமலநாதனுக்குப் புதுமையாக இருந்தது. அது அவனுடைய வாழ்வின் கடைசிப் பகுதியை விளக்குவது போலிருந்தது.

பனி மூடிடும்பொழுது, வேகமாகச் செல்வதில் பலனில்லை, வழி தவறும், இடுக்கண் நேரும். ஒளி அதிகமானதும், பனி கலையும், வழி தெரியும், ஆபத்து விலகும்.

சந்தேகமும் ஒருவகையில் மூடுபனிபோன்றதே! சிறுகச்சிறுக சூழ்ந்து, சுட்டிக்காட்ட முடியாதபடி, அறியாதவகையில் மனக் கண்ணை மூடிவிடுகிறது. அந்த மூடுபனியில், அமைதியிழந்து, வேகமாகச் சென்றால் ஆபத்து உண்டாகிறது. சந்தேகமெனும் மூடுபனி என்றுமே விலகாது என்று அர்த்தமல்ல, அறிவெனும் ஒளி வீசினால், அகலும். அமைதியுடன் காத்திருக்கவேண்டும் பனி விலகும்வரை. இடையில் எடுக்கப்படும் அவசரமுடிவுகள்—ஆபத்தில் இறக்கிவிடும்.

பனிவெளியில் சிக்கி, காலிடறி, பள்ளத்தில் வீழ்ந்துவிடும் வழிநடைப்போக்கனைப் போன்ற நிலையில்தான் கமலநாதன் வாழ்வும் இருந்தது. பனிவெளி அவன் மனதில் உண்டானது, சூழ்ந்த சந்தேகம் அவன் காதலை மறைத்தது. கடைசியாக, கைகோர்த்து நின்ற காதலர் பிரிந்தனர்.

கமலநாதனுக்குச் சோகமோ, வருத்தமோ உண்டாகவில்லை. வேறொருவருடைய வாழ்க்கையைப் பரிசீலிப்பதுபோல, தன் வாழ்க்கையில் வளைவு நெளிவுகளை அவன் பார்த்துக்கொண்டிருந்தது, அவன் மனதில், அவனே ஒரு விசாரிக்கப்படவேண்டியவனாக — குற்றவாளியாக நின்றான். அவனுடைய சட்ட அறிவு சொல்லியது, "நீ குற்றவாளி!" என்று.

கார் கண்ணாடிமீது பனி புகைபோலப் படர்ந்திருந்தது. பக்கத்தில் நின்றுகொண்டிருந்த கிழவன் குளிர் தாங்காமல், மரத்தடியிலிருந்த தன் குடிசைக்குப் போய்விட்டான்.

"இனி என்ன செய்வது? உலகில் இனி என்ன இருக்கிறது? மறந்துவிட்டேன். வீட்டில், இருவர் குலசேகரன், சகுந்தலா இருவரும் காத்திருப்பார்கள். எனக்கும் அவர்களுக்குமிடையில் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது!'' கமலநாதன் சிறிதுநேரம் உட்கார்ந்திருந்தான்.

பகலின் வெளிச்சம் அதிகம் ஊடுருவியது, மூடுபனி கரைய ஆரம்பித்தது. கமலநாதன் கீழே இறங்கிவந்து, கிழவனைக் கூப்பிட்டான். போர்வையை விலக்கி, கிழவன் எட்டிப்பார்த்தான்.

"இந்தப் பக்கத்தில் தபால்பெட்டி எங்கிருக்கிறது?''

"பால்புட்டியா?'' கிழவனுக்குச் சரியாகக் காதுகேட்கவில்லை.

''கடிதம் போடுகிற தபால்பெட்டி!''

"ஊருக்குள் இருக்கிறது. அதில் போடவேண்டுமா?''

"ஆமாம்!''

கமலநாதன் தன் தோல்பையைத் திறந்து அதிலிருந்த இரண்டுமூன்று நோட்டுகளை—அவைகளுக்கு இப்பொழுது மதிப்பில்லாமல் போய்விட்டது—கொடுத்தான்.

கிழவன் திகைத்தான்.

"சுருட்டு வாங்க வைத்துக்கொள்! மறந்துவிடாமல் கடிதத்தைப் போட்டுவிடு!''

"சரிதான், சாமி!'' கிழவன் கையிலிருந்த கடிதத்தைப் பார்த்தான் அதன்மேல் எழுதப்பட்ட மை கலையாமல், புதிதாக இருந்தது. காரினுள் உட்கார்ந்து அவர் எழுதியிருக்கவேண்டும். அவனுக்குக் கிடைத்த மூன்று பத்துரூபாய் நோட்டுகள், அவன் வாழ்க்கையில் அதுதான் முதல்தடவையாக சேர்ந்தாற்போல் முப்பது ரூபாய்களைத் தன் கையில் தொட்டுப் பார்ப்பது!

"நான் போகிறேன்.''

"பார்த்துப் போங்கள்! ஒரு மாதத்துக்கு முன்புதான் அந்தப் பாதையில் கார் கவிழ்ந்து, ஒரு அம்மாவுக்குப் பலத்த காயம் பட்டுவிட்டது.''

கார் கிளம்பிப்போய்விட்டது. சிறிது சிறிதாக மங்கி, புன் பார்வையிலிருந்து மறைந்துவிட்டது.

கிழவன் பத்துரூபாய் நோட்டுகளை தன் மேல் துண்டுமுனையில் முடிந்துகொண்டு எழுந்தான். இனி மங்கையை ஒட்டிக்கொண்டு போகவேண்

டும். அத்துடன் ஊருக்குள்போய் கடிதத்தை சிவப்புப்பெட்டியில் போடவேண்டும். பையன் வந்ததும் கடிதத்தைக் கொடுத்தனுப்பலாம்.

ஆடுகளைத் தட்டி எழுப்பி, அவன் சேர்த்தான். எண்ணிக்கைக் குறையவில்லை.

அந்தச் சமயத்தில் இரண்டு கார்கள் ஒன்றன்பின் ஒன்ருக வந்து நின்றன. முதல் வண்டியிலிருந்து, குலசேகரன் இறங்கினன். "இந்தவழியாக ஒரு கார் வந்ததே? அது எங்கேபோயிற்று ?"

"மலைப்பக்கம்தான் !" பின் காரிலிருந்து போலிஸ் அதிகாரி ஒருவர் இறங்குவதைப் பார்த்ததும், கிழவனுக்குச் சற்றுப் பயம் உண்டானது. கொள்ளை, கொலை செய்துவிட்டுத் தப்பிப்போகிறவனைப் பிடிக்க அவர்கள் வருகிருர்களோ ?

"அந்தக் கடிதம் ஏது ?"

"தபால்பெட்டியில்போட அவர் கொடுத்தார் !"

குலசேகரன் கடிதத்தைப் பிடுங்கப் பார்த்தான். அவனுடைய முகவரிக்குத் தீட்டப்பட்ட கடிதம்! அதைத் திறந்தான், பின்னல் நின்று சகுந்தலாவும் படித்தாள்.

"அன்புள்ள குலசேகரனுக்கு, இந்தக் கடிதம் உன்கையில் கிடைக்கும்பொழுது நான் உங்களைவிட்டு—நீண்டதொலைவு சென்றிருப்பேன்—தங்கம் சென்ற இடத்தைத் தேடி நானும் புறப்பட்டுவிட்டேன்.

சகுந்தலாவுக்கு எனது வாழ்த்துதலைத் தெரிவிக்கவும்! சகுந்தலாவை ஏற்றுக்கொண்ட உனக்கு எனது மதிப்பும் வணக்கமும்!

வாழ்க்கைச் சோலையில், எனக்கு குற்றமற்ற, தூய, மணமுள்ள மலர் கிடைத்தது. மூடனை நான் அதைப் புகையில் வீசியெறிந்துவிட்டேன். அது வாடி, கருகிவிட்டது. புழுதி வீசப்பட்ட மலர் உன் கையில் பட்டது. ஆனல், இயல்பாக, குற்றமற்ற, மணமுள்ள மலர்! அதன் அருமை தெரிந்த நீ புழுதியைத் துடைத்தாய்! மலரை ஏற்றுக்கொண்டாய்! வாழ்க நின் உள்ளம்!

காதலித்தால் மட்டும் போதாது! காதலுக்கு மதிப்பும் தரவேண்டும்! மதிப்பு வைக்கப்படாத காதல், அடிப்படையில்லாத கட்டிடம்போல! சிறு காற்றுக்கும் சரிந்துவிடும்! மதிப்புத் தெரியாதவன் கையில் கிடைத்த மாணிக்கம்—அவன் அதை வீசியெறியத் தயங்கமாட்டான்!

போகிறேன், விடைபெற்றுக்கொள்கிறேன் !

என் கடைசி வாழ்த்துக்கள்! இன்பமாக நெடுநாள் வாழுங்கள் என்றுகூட நான் சொல்லவில்லை! உலகில் இன்பத்தைக் காண்பதற்குமுன், வாழ்வதற்கு முயலவேண்டும்! அது மிகக் கடினமான செயல்!

என் அன்பும், நன்றியும் !

இப்படிக்கு,
கமலநாதன்.

குலசேகரன் கடிதத்தை மடித்துக் கொடுத்தான். சகுந்தலா நீர்வழிந்த கண்களுடன் வாங்கினள்.

"கடிதத்தில் என்ன இருக்கிறது ?" போலிஸ் அதிகாரி கேட்டார்.

"சீக்கிரம் தொடர்ந்து போகலாம்! ஒருவேளைப் பிடித்தாலும் பிடிக்கலாம்!" குலசேகரன் தன் காரை வேகமாக ஓட்டினன். மறு கார் பின்தொடர்ந்தது.

மலைச் சரிவில் குளிர்ந்த காற்று வீசியது. வளைந்து செல்லும் பாதைகளில் இரண்டு கார்களும் ஊர்ந்து சென்றன.

"இரவு பூராவும் திரும்பவில்லையென்றதும் என்றதும், நான் எதிர்பார்த்தேன்! காலையில் அப்படியே நிகழ்ந்துவிட்டது !" குலசேகரன் சோகக் குரலில் சொன்னன்.

"அப்படியானல், அவர்......" சகுந்தலா தயங்கினள்.

குலசேகரனின் பார்வை தூரத்தில் மலைச் சரிவை அடுத்துப்போகும் பாதையில் இருந்தது. கமலநாதன் வந்த கார் காணப்படவில்லை.

பாதை செங்குத்தான பாறைகளின்மீது படிந்து சென்றது. சிறிது தவறினலும், கார் கீழே உருண்டு போய்விடக்கூடும்.

பின்னல் வந்துகொண்டிருந்த கார் நின்றுவிட்டது. குலசேகரன் காரை நிறுத்திப் பார்த்தான். போலிஸ் அதிகாரி, கையை அசைத்து வரச்சொன்னர். குலசேகரனும், சகுந்தலாவும் விரைந்து சென்றர்கள். அதற்குள் போலிஸ் அதிகாரியும், அவருடன் வந்தவர்களும் சரிவில் இறங்கத் தொடங்கினர்கள்.

இருநூறு, முன்னூறு அடிக்குக் கீழ் புகை வந்துகொண்டிருந்தது. கமலநாதனின் கார்! புதர்களுக்கு மத்தியில் சிக்கி, அது புகையில் மறைந்திருந்தது! கற்களைத் தாண்டி, புதர்களை விலக்கி அருகில் சென்றார்கள்.

“இதே இடத்தில்தான் முன்பு டாக்டர் தங்கத்தின் காரும் விபத்துக்குள்ளாகியது!” போலிஸ் அதிகாரி சொல்லிக்கொண்டிருந்தார்.

காருக்குச் சற்று தூரத்தில் ஒரு செடிக்குக் கீழ் கமலநாதனின் உடல் கிடந்தது. பெட்ரோல் எரிந்த வாசனை வீசியது. காலியாகிக் கிடந்த பெட்டி ஒன்றை யெடுத்து, “கீழே விழுவதற்கு முன் பெட்ரோலை ஊற்றி யிருக்க வேண்டும். அந்தப் புகையில் மயக்கமுற்று பின் இறந்திருக்கவேண்டும்!” என்று போலிஸ் அதிகாரி உடலின் அருகே சென்றார்.

கமலநாதனின் முகத்தில், கடைசி நேரத்தில் ஏற்படும் வேதனைக் குறிகளைக் காணோம். அமைதி நிலவியது. தீயின் சுவாலை அவன் உடைகளைச் சிதைத்திருந்தது, கார் கீழே உருண்டு வந்ததும், கதவு திறந்து அவன் வெளியே விழுந்திருக்கவேண்டும்.

குலசேகரன் கலங்கிய கண்களுடன் அருகில் நின்று பார்த்தான். உலகில் எல்லாம் இவ்வாறு ஒரு முடிவுக்கு வரத்தான் வேண்டுமா? முடிவு சோகமானது. அதில் தோல்வி எதிரொலித்தது.

கமலநாதன் வைத்திருந்த, காகிதங்கள் எரிந்துகருகியுமிருந்தது. அவனுடையகையில் ஒரு காகிதம் பாதி எரிந்து பாதி எரியாமல் விரல்களால் மூடப்பட்டு இருந்தது. அந்தக் காகிதத்தை எடுத்துப் பார்த்தபொழுது ஓரங்கள் கருகி, மத்தியில் கீழ்க்கண்ட வாக்கியம் மட்டும் மிகுந்திருந்தது.

“உன்னை நான் காதலிக்கிறேன்.”

கமலநாதன் எழுதிய முதல் காதற் கடிதத்தின் கடைசி வார்த்தைகள் அவை, அவனுடைய வாழ்வின் கடைசி நேரத்தில் மிகுந்த வார்த்தைகள் அவை!

— முடிவுற்றது —

சிறந்த வெளியீடுகள்

திருக்குறள்
மணக்குடவர் உரை 4.0

நாவலர் சோமசுந்தர பாரதியார், எம்.ஏ., பி.எல்.

நற்றமிழ் 2.0
பழந்தமிழ் நாடு 2.8

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, எம்.ஏ., எல்.டி.

தென்னாடு 2.0
தமிழ்முழக்கம் 2.4
தென்மொழி 3.0

திருவத்திபுரம் புலவர் க. கோவிந்தன், எம்.ஏ.

இலக்கிய வளர்ச்சி 2.0
தமிழர் வாணிகம் 1.8
அறம் உரைத்த அரசர் 1.8

கவிஞர் வாணிதாசன்

கவிதைகள் 2.8
எழிலோவியம் 0.12
கொடி முல்லை 0.12

இவை நீங்கலாக எல்லா தமிழ் நூல்களும் எங்களிடம் கிடைக்கும். வியாபாரிகளுக்கும், நூல் நிலையங்கட்கும் தக்க கழிவு உண்டு.

மலர் நிலையம்
133, பிராட்வே...சென்னை-1.

எட்னா எரிமலை

ஐரோப்பாவில் இருக்கும் பெரும் எரிமலையான எட்னா எரிமலை ஐந்தாண்டுகளுக்குப் பிறகு முதன்முதலாக வெடிக்க ஆரம்பித்திருக்கிறது. விளைவு பயங்கரமானதாக இருக்காது என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். சாதாரணமாக ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை எரிமலை வெடிக்கும். ஒவ்வொரு சமயங்களில் மணிக்கு 45 மைல் வேகத்தில் அக்கினிக் குழம்பு கிளம்புகிறது.

எரிமலை வெடிக்கும் நகரத்தில், மலையின் உச்சியில் பல இடங்களில் எளிதாகத் தூக்கிச் செல்லக்கூடிய ரேடியோ ஒலி பரப்பும் கருவிகளுடன் மலையேறிகள் இருக்கிறார்கள். இக்கருவியின் மூலம், எரிமலைப் பிரதேசங்களின் தலைநகரான கடானியா (Catania) வில் இருக்கும் அதிகாரிகளுடன் அடிக்கடி தொடர்பு கொள்ளுகிறார்கள். இந்நகர், எட்னா மலையடிவாரத்தில் இருக்கிறது. எரிமலை வெடிப்பினாலும், நில நடுக்கத்தாலும் இந்நகர் ஏழு முறைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இது தவிர அக்கம் பக்கத்திலிருக்கும் அநேக கிராமங்களும் அழிக்கப்பட்டிருக்கின்றன. எரிமலை வெடிக்கும்பொழுது அவற்றினின்று வெளிக் கிளம்பும் நெருப்பின் ஒளியை 50 மைல்களுக்கு அப்பாலிருந்து தாராளமாகப் பார்க்க முடியும்.

மிருகத்தின் நுண்ணறிவு

மலைச்சரிவுகளிலும், காடுகளிலும், கிராமங்களின் இடையே ஊடுருவிப்பாயும் எரிமலை நீரோடைகள் அடிக்கடி தன் நிறத்தை மாற்றிக்கொண்டிருக்கும். எரிமலை எப்பொழுது வெடிக்கும் என்பது இன்றுவரை மனிதனுக்குத் தெரியாத ஒன்று. மிருகங்களுக்கு எரிமலை வெடிக்கும் நேரம் தெரியும் என்று அங்குள்ள கிராமவாசிகள் கூறுகிறார்கள். எரிமலை வெடிப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பிருந்தே நாய்கள் ஆகாரமின்றி பயங்கரமாகக் குரைத்துக்கொண்டு திரியுமாம். பறவையினங்கள் கூவமாட்டா; கோழிகள் பரிதாபமாகப் பறக்க முயன்றுகொண்டிருக்கும்; காட்டு எலியும் முயலும் புதர்களிலிருந்து வெளிக்கிளம்பி, நாய், மனிதன் இவர்களைக் கண்டு பயமின்றி நடுத்தெருவில் ஊர்ந்து கிடக்கும்; பூனைகள் தங்கள் குட்டிகளைத் தூக்கிக்கொண்டு ஓடும்; குதிரையும் கழுதையும் ஏதோ துன்பத்தை அறிவதுபோல் தலையைத் தூக்கிப் பார்த்து ஓடுவதற்கு முயலும்.

உலகில் மிகவும் பயங்கரமான இந்த எரிமலை இன்றுவரை 100 முறைகள் வெடித்திருக்கின்றன. இவற்றில் மிகவும் பயங்கரமானது 1669-ல் வெடித்ததுதான், மலையில் 20 மைல் அகலத்துக்கு வெடிப்பு ஏற்பட்டது. உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏராளமாக ஏற்பட்டது. எரிமலையின் சக்தியை அடக்கி, அதன் விளைவைத் தடுக்க அங்கு குண்டுகளை வீசுவதென்று 1947-ல் முடிவு செய்யப்பட்டது எரிமலைப்பகுதியில் உள்ள நிலச் சொந்தக்காரர்கள் இதை எதிர்த்ததால் வெடிவீசும் முயற்சி கைவிடப்பட்டது.

ஒளி காட்டி கட்ட முயற்சி

சமீப காலத்தில், எட்னா எரிமலையின் உச்சியில், ஒரு பெரும் கலங்கரை விளக்கம் கட்டுவதற்கு பொறியியலார்கள் முயன்று வருகின்றனர். இம்முயற்சி முடிவடைந்தால், மத்தியதரைப் பகுதியில் பறக்கும் எல்லா ஆகாய விமானங்களுக்கும் மிகவும் பயன்படும் என்று நம்பப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து 10,000 அடி உயரத்துக்குமேல், ஒரு கோடி மின்சக்தியுடன் மத்தியதரைக்கடலின் எந்தப் பகுதியில் இருந்தாலும் அவ் வெளிச்சம் தெரியும் எனக் கணக்கிடப்படுகிறது.

மலாயாத் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி! டெலிபோன் நெ. 22

அவ்வை புத்தக நிலையம்

142, ஜாலான் இட்ரீஸ்-கம்பார். (மலாயா)

எங்களிடம்!

தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர்களின் கருத்தோவியங்களும் அறிவூட்டும் நாவல்களும் துப்பறியும் கதைகளும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், (சினிமா) கதை வசனபாட்டு புத்தகங்களும், கலர் படங்களும், தாயகத்திலிருந்து வரும் வார, மாத பத்திரிகைகளும், ஸ்டேசனரி சாமான்களும், காலண்டர் மற்றும் ஆங்கில காமிக்ஸ், மேக்கிசன் & நாவல்களும் மலாய் நாவல்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

குறிப்பு : வியாபாரிகளுக்கு தக்க கழிவு உண்டு.

வெளியூர் ஆர்டர்களை தாமதமின்றி கவனிக்கப்படும். உடன் தொடர்பு கொள்க.

AVVAI BOOK STORE

142, JALAN IDRIS, KAMPAR. Tel. No. 22. PERAK, MALAYA.

கிளை நிலையம் : அவ்வை புத்தக நிலையம், 9, புரூஸ்டர் ரோடு, ஈப்போ

AVVAI BOOK STORE, 9, Brewster Road, IPHO. Tel. No. 4756.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்-ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.